Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை (07.04.2013) பக்கங்கள் 20 ஓசை - 189
















### 64 வீதமானோர் உயர்தரத்திற்கு அனுமதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த வருடம் க.பொ.த. (சா.த) பரீட்சைக்கு தோற்றியோரில் 64 வீதமான மாணவர்கள் உயர்தரத்தில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இது அதன் முன்னைய வருடத்தினைவிட 4 வீதம் அதிகமெனவும் ஜயந்த புஸ்ப

(19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர்கள் 26 பேர் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறிய இழுவைப்படகுகளில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் 26 பேர் நேற்று முன்தினம் இரவு கடற்படையினராலும், கடலோரக் காவல் படையினராலும் கைது செய்யப்பட்டு யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து இழுவைப்படகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட இவர்கள் தமிழ்நாடு காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை இவர்கள் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளினால் ஊர்காவற்றுறை பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதன்போது இவர்களை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட்ட பதில் நீதவான், அவர்களது பொருட்களை நீதிமன்றில் 11ஆம் திகதி பாரப்படுத்துமாறும் உத்தரவிட்டதாகவும், யாழ்.கடற்றொழில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்நாடு எதிர்த்த போதிலும் இந்திய உறவில் பாதிப்பில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளிலும் தீவிரமான கடும் போக்குவாதிகளின் அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும் இந்தியாவுடனான இராஜதந்திர ரீதியான உறவுகள் எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு இந்தியாவுடனான உறவுகள் குறித்து விளக்கமளிக்கையில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ்நாட்டில் தீவிரமான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் இந்தியா மட்டுமல்லாது இலங்கையும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றது.

இருந்தபோதிலும், தமிழ்நாடு

(19) ஆம் பக்கம் பார்க்க

### பிரான்சில் கத்திக்குத்து; மட்டுவில் வாசி பலி



(சாவகச்சேரி)

பிரான்ஸில் இடம் பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் மட்டுவிலைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பரராஜசிங்கம் சர்மிலன் (வயது-36) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய எம்.பி.க்கள் குழு நாளை இலங்கை விஜயம்

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்ற உறுபினர்கள் குழு நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக்குழு எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் என்றும் வடக்கிற்கான விஜயத்தையும் அந்தக் குழுவினர் மேற்கொள்வார்கள் என்றும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் படையினர் கால இழப்பு; கணக்கெடுப்பு நடத்தவுள்ளது அரசு

இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய புதிய கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இதுதொடர்பான முன்னாயத்தங்களில் ஈடுபட்டு வருகிறது.

முதற்கட்டமாக, இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெற்ற காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள், சொத்து இழப்புகள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டம் ஆறு மாதங்களுக்குள் நிறை வடையும் என்றும், அடுத்தமா தம் இந்தக் கணக்கெடுப்பு ஆரம்பிக்கும் என்றும் சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தலைவர் சி.ஏ.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்த வகையான முதலாவது கணக்கெடுப்பு இது என்றும் இதுதொடர்பான கேள்விகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மாத்தளை மனிதப் புதைகுழி விசாரணை நடத்த தயக்கம்?

மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி தொடர்பில் சுயாதீனமான விசாரணையை மேற்கொள்ள அரசாங்கம் தயக்கம் காட்டி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாத்தளை மருத்துவமனை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 154 பேரின் எலும்புக்கூடுகளும், 1987ஆம் ஆண்டுக்கும், 1990ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் புதைக்கப்பட்டவை என விசாரணையின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இக்காலப் பகுதியில் யார் ஆட்சியில் இருந்தாலும், இலங்கையில் நீதிக்குப் புறம்பாக இடம்பெற்ற எல்லாப் படுகொலைகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

எனினும், இது குறித்த விசாரணைகளுக்கு உத்தரவிட அரசாங்கம் தயக்கம் காட்டி வருகி

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண தேர்தல்; குழம்புகிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் குழப்ப நிலை தோன்றியுள்ளதனைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வரும் கருத்துக்களிலிருந்து அறிய முடிவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் அதில் போட்டியிடுவது தொடர்பாக எவ்வித தீர்மானங்களையும் எடுக்கவில்லையெனக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ள அதேவேளை,

வடமாகாண சபைத்தேர்தல் இவ்வருடம் இடம்பெறுமெனவும், அதில் கூட்டமைப்பு போட்டியிடுமெனவும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடமாகாண

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் விடயத்தில் தமிழக உணர்வை புரிந்துள்ளோம்

### கூறுகிறார் ராகுல்காந்தி

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் விடயத்தில் தமிழக மக்களின் உணர்வுகளைக் காங்கிரஸ் முழுமையாகப் புரிந்து கொண்டுள்ளதாக அக்கட்சியின் துணைத் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். இந்திய மத்திய அமைச்சர் வாசனுடன் கடந்த வியாழக்கிழமை நடந்த சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க



அரியாலை சனசமூக நிலையத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்தாடிய தெல்லிப்பளை யூனியன் அணி 57:37 என்ற புள்ளி விகிதத்தில் வெற்றியீட்டியது. வெற்றியீட்டிய தெல்லிப்பளை யூனியன் அணியினரை வெற்றிக்கிண்ணத்துடன் காணலாம். (படம்: சாதனா)

# விளையாட்டுப் போட்டியில் விபரீதம்; மோ.சைக்கிள் புகுந்து எண்மர் காயம்

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு நேற்று முற்பகல் யாழ்.நகரில் நடைபெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியின் போது போட்டியாளர்கள் முடிவிடத்தை அண்மித்த வேளை இடையே புகுந்த மோட்டார் சைக்கிளினால் ஏற்பட்ட விபத்தில் எட்டுப்போட்டியாளர்கள் காயமடைந்துள்ளதுடன் அவர்களின் வெற்றி வாய்ப்பும் தவறிப்போயுள்ளது.

நேற்றுக்காலை தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு படையினரும், பொலிஸாரும் இணைந்து விளையாட்டுப் போட்டியொன்றை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தினர்.

இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வின் போது ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியொன்று காலை யாழ். துரையப்பா விளையாட்டரங்குப் பகுதியில் இருந்து ஆரம்பமாகியது.

சுமார் 60 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து கண்டி வீதி வழியாக வீரர்கள் நெருக்கமாக போட்டி நிறைவடையும் இடமான துரையப்பா விளையாட்டரங்க சந்தியை அணமித்த போது யாழ்.நீதிமன்றத்திற்கு அருகே குறுக்கு வீதியினால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று போட்டியாளர்களின் மத்தியில் புகுந்துகொள்ளவே ஒரு பகுதியினர் வீதியில் சரிந்து வீழ்ந்து காயமடைய ஏனையவர்கள் போட்டி நிறைவிடைத்தை வந்தடைந்தனர்.

இதனை அடுத்து காயமடைந்த எட்டுப்போட்டியாளர்கள் அம்புலன்ஸ் வண்டி மூலமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்றதாக வைத்தியசாலைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் காரணமாக குறித்த பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்துச் சிரமம் ஏற்பட்டது. அத்துடன் மரதன் ஓட்டம், மகளிருக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகள் என்பனவும் தொடர்ந்து நடைபெற்றது.

இவ்விபத்துச் சம்பவத்தில் 512 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த சமிந்தகுமார (வயது 30), பண்டத்தரிப்பைச் சேர்ந்த இராசையா றீகன் (வயது 27), துரைராஜா ரஜீவ் (வயது 31), நல்லூரைச் சேர்ந்த எஸ்.தனுராஜ் (வயது 18) ஆகியோர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ்மொழித் தின போட்டிகள்

(வலிகாமம்)

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள வலிகாமம் கல்வி வலய மட்டத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் நடைபெறவுள்ளதாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார்.

கோட்டமட்டத்தில் நடைபெறவிருந்த மொழித்திறன், இசை, நடன்ம், நாட்டுக்கூத்து முதலான போட்டிகளில் 1 ஆம், 2 ஆம் இடங்களைப் பெற்றவர்களே வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதிபெற்றுள்ளனர்.

வலயமட்ட மொழித்திறன் போட்டிகளான பேச்சு, பாவோதல், வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, (கதைகூறல்) விஷதம், தமிழறிவு, வினாவிடை, மேடை நாடகம் முதலான போட்டிகள் இணுவில் மத்திய கல்லூரியில் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளன.

இசை சம்பந்தமான போட்டிகளான தனி இசை, குழு இசை, நாட்டார் பாடல், வில்லுப்பாட்டு முதலான போட்டிகள் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணி முதல் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நடனப்போட்டிகளான இசையும் அசைவும், பிரிவு 2,3,4,5 இற்கான நடனம், குழு நடனம், நாட்டிய நாடகம் ஆகியன ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி காலை 11 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

சகல நாட்டுக்கூத்துப்போட்டிகளும் ஏப்ரல் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. பங்குபற்றும் போட்டியாளர்கள் தங்கள் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தக்க அஞ்சல் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதி ஆகியவற்றில் ஒன்றினைச் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# க.பொ.த சாதாரணதர பெறுபேறுகள் சில

அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளின் முடிவுகள் வெளியாகி இருக்கின்றன.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

கே.நிலானி 9ஏ, வி.நிவேதா 9ஏ, ஏ.அனுசினி 8ஏ,பி, எஸ்.ஊர்மிளா 8ஏ,பி, ஏ.விதுர்சா 8ஏ,சி, எஸ்.நிலோஜினி 8ஏ,சி, பி.பாலாஜினி 8ஏ,சி, கே.ஜனனி 8ஏ,சி, ஆர்.சகானா 8ஏ,சி, ஏ.தர்மிளா 7ஏ,2பி, கே.துசானி 7ஏ,2பி, என்.ரம்யா 7ஏ,பி,சி, வை.அமிர்தவர்ஷினி 7ஏ,பி,சி, ஆர்.தக்சலா 7ஏ,பி,சி, எஸ்.கௌரீசா 6ஏ,3பி, ஆர்.சாம்பவி 6ஏ,2பி,சி, ஆர்.கஸ்தூரி 6ஏ,2பி,எஸ், எஸ்.ஜீவகி 6ஏ,பி,சி,எஸ், எம்.கிருஷாந்தி 6ஏ,2சி,எஸ், கே.நிஷானி 5ஏ,3பி,சி, ஆர்.ரம்யா 5ஏ,3பி,சி, எஸ்.நிரஞ்சலா 5ஏ,2பி,2சி, பி.சஞ்சிகா 5ஏ,2பி,2சி, எஸ்.சங்கவி 5ஏ,2பி,2சி, கே.லக்சியா 5ஏ,2பி,சி,எஸ். (01)

# மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய போட்டிகள்

(சாவகச்சேரி)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ பெருவிழாவினை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் இந்து சமயப் போட்டிகள் இன்று இடம்பெறுகின்றது.

தரம் 1, 2, 3 மாணவர்கள் பதினைந்து 'ஆத்திசூடி' முறைப்படி இராகத்துடன் இசைக்கப்படல் வேண்டும். தரம் 4 தொடக்கம் தரம் 11 வரை பஞ்சபுராணம் ஒழுங்கு முறைப்படி இராகத்துடன் இசைக்கப்படல் வேண்டும். இப்போட்டிகள் மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலை அங்கத்துவ மாணவர்கள் அனைவரும் போட்டி ஆரம்பமாகும் நேரத்திற்கு முன்னதாக சமுகமளிக்கவேண்டும் எனவும், இப்போட்டிக்கான பரிசளிப்பு தீர்த்தத் திருவிழா அன்று இடம்பெறும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாக அமையும் என்றும் அறநெறிப் பாடசாலையின் காப்பாளர் கலாநிதி பா.நிமலதாஸன் அறிவித்துள்ளார். (43)

# நாடகத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

திறந்தவெளி நாடகத்திருவிழா இன்றும் இடம்பெறுகின்றது.

நேற்று மாலை ஆரம்பமான இந்தத்திருவிழாவில் நூறு நடிகர்களால் பத்து நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றது.

மாலை 5 மணியளவிலிருந்து 9 மணிவரை சங்கிலியன் பூங்காவில் இடம்பெறும். இவ்விழாவிற்கு யு.எஸ் எயிட் அனுசரனை வழங்குகின்றது.

# மலிவு விலைச் சந்தை ஸ்கந்தபுரத்தில்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஸ்கந்தபுரத்தில் தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு திவிநெகும மலிவு விலைச் சந்தை ஏப்ரல் 08, 09 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச்செயலகமும் கரைச்சி பிரதேச செயலகமும் இணைந்து நடத்தவுள்ள இச்சந்தையில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மலிவு விலையில் பொருட்கள் விற்கப்படவுள்ளது.

உற்பத்தியாளர்களையும் பொது மக்களையும் இம்மலிவு விலைச்சந்தையில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (90)



சூரியன் எப்.எம்.வானொலியின் செய்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.இந்திரஜித்தின் 'ஊடகப் படிகள்' நூல் அறிமுகவிழா யாழ்.திருமறைக்கலா மன்ற மண்டபத்தில் நேற்று மாலை சிறப்புற நடைபெற்றது. இந்நிகழ்வில் நூல் ஆசிரியர் உரையாற்றுவதையும், நூலின் முதற்பிரதியை முன்னாள் அதிபர் இரட்ணசிங்கம் சற்குணலிங்கம் வழங்க அதனை நுவான் பிள்ளை அடிகளார் பெற்றுக்கொள்வதனையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (படங்கள்: பார்த்தீபன்)

# உயர்தரப் பரீட்சைகளை பாடசாலைகளில் நடத்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வியமைச்சின் 2012 /13 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தில் கூறப்பட்டவாறு திருத்தப்பட்ட பாடவிதானத் திற்கு அமைவாகக் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளைப் பாட சாலைகளில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளு மாறு கல்வியமைச்சின் செய லாளர் எச்.எம்.குணசேகர சகல மாகாண, வலயப் பணிப்பாளர் களுக்கும் அறிவித்துள்ளார்.

திருத்தப்பட்ட பாட விதானத் திற்கு ஏற்ப பரீட்சைகளை நடாத்தும் நடைமுறை 2013 ஆம் ஆண்டு முதலாம் தவணை முதல் எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மெனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

திருத்தியமைக்கப்பட்ட பாட விதானத்திற்குரிய பாடங்களாக பௌதிகவியல், பொருளியல், வணிகக்கல்வி, கணக்கியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்கள் கல்வி அமைச் சினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிடப்படாத க.பொ.த உயர்தர கணிதம், விஞ் ஞானம், வர்த்தகம், கலைத் துறை சார்ந்த பாடங்களுக்கான பரீட்சைகள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலுள்ள பாட விதானத்திற்கு ஏற்ப நடாத்தப்பட வேண்டும் எனவும், இவை திருத்தியமைக்கப்படாத பாடவிதானங்கள் எனவும் கல்வி யமைச்சு அறிவித்துள்ளது.

இவற்றினைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் காலங் களில் பாடசாலைகள் மாண வர்களைப் பரீட் சைக்குத் தயார் படுத்த வேண் டும் எனவும் அறிவுறுத்தப்பட் டுள்ளது. (06)

# சைவ நெறிப்பாட செயலமர்வு

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலும் சேவை யாற்றும் இந்துசமய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் களிற் கும் தெரிவு செய்யப் பட்ட சிரேஷ்ட ஆசிரியர்களிற்கு மான சைவநெறிப்பாடச் செயலமர்வு நடைபெறவுள்ள தாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வு மருத னார் மடத்தில் அமைந்துள்ள வடமாகாணக் கல்வித்திணைக் கள கேட்போர் கூடத்தில் ஏப்ரல் 19 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் தரம் 10 11 வகுப்புக்களிற்குரிய மாண வர் செயலட்டை தயா ரிக்கும் செயற்பாடு இடம்பெற வுள்ளதால் பங்குபற்றுவோர் ஆசிரியர் கைநூல் பாட நூல் என்பன எடுத்தவரும்படி கேட் டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (06)

## பதவி துறப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தின் பிரதான இணைப் பதிகாரியாகப் பணியாற்றிய வட மாகாண சபையின் முன்னாள் தலைமை செயலாளர் சிவசாமி பதவியேற்று ஒரு மாதம் பூர்த்தி யாகாத நிலையில், அந்தப் பதவியில் இருந்து விலகிக் கொண்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற் படுத்துவதாக காணி அமைச் சின் இரண்டு அலுவலகங் களை யாழ்ப்பாண மாவட்ட செய லகத்தில் ஏற்படுத்தியுள்ளது.

# இத்தாலிக்கு அனுப்புவதாகக் கூறி பல இலட்சம் ரூபா பணமோசடி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரி வில் இளைஞர் ஒருவரை இத்தாலி நாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பத்து இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த நபர் குறித்து முறைப் பாடு ஒன்று வல்வெட்டித்துறைப் பொலி ஸாருக்கு கிடைத்திருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி கிடைத்த இந்த முறைப்பாட்டில் மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர் வேப்பங்குளத்தைச் சேர்ந் தவர் எனவும் முறைப்பாட்டுக்காரர் தொண் டைமானாற்றைச் சேர்ந்தவரென்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரி விததுள்ளார்.

சந்தேக நபர் தலைமறைவாகி யிருப்பதாகவும் இதனால் கைது செய் முடியவில்லை எனவும் சந்தேக நபரைக் கைதுசெய்ய புலனாய்வு மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (பா)

# சாதாரணதர பெறுபேறுகள்

மானிப்பாய் மகளிர் கல்லூரி

ப. சர்மிளா 9 ஏ, க.தனுசியா 8 ஏ,பி ஆங்கில மொழிமூலம் , ஸ்ரீ.ஆரபி 8 ஏ,பி (ஆங்கில மொழிமூலம்), சி.நவ நீதா 8ஏ, பி, கு.கம்சத்வனி 6 ஏ,2 பி, சி (ஆங்கிலமொழிமூலம்), த.ரிசாயா 4 ஏ,2பி,3சி (ஆங்கில மொழிமூலம்), சி.அனிக்கா 4ஏ,2பி,3 சி, ந.நிதர்சனா 4ஏ,பி,3 சி, ரா.நிரோஷா 3ஏ,4பி,2சி (ஆங்கில மொழி மூலம்), உ.கம்சப்பிரியா (3ஏ,2பி, 2சி,எஸ்), லோ.கீர்த்தனா (3ஏ,2பி,3சி), அ.அபிரா (3ஏ,பி,5சி), இ.கஸ்தூரி (3 ஏ,3 சி,2 எஸ்).

# பெற்ற பிள்ளைகள் மூன்று பேர் இருந்தும் 93 வயதுத் தந்தை முதியோர் இல்லத்தில்

(திருநெல்வேலி)

பெற்ற பிள்ளைகள் மூன்றும் பெற்றோரைக்கைவிட்டு இந்தி யாவுக்குச் சென்றுவிட்ட நிலை யில் மனைவியுடன் வாழ்ந்து வந்த வயோதிபர் ஒருவர் 89 ஆம் ஆண்டு மனைவியையும் இழந்துவிட்ட பின்னர் தற்போது கவனிப்பதற்கு எவருமற்றவ ராக தனது 93 ஆவது வயதில் கைதடி முதியோர் இல்லத்திற்கு வந்து சேர்ந்துள்ளார் .

மணியங்குளம் ஸ்கந்தபுரம் வீதி, கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெகநாதன் இராசையா என் னும் இம்முதியவர் கைதடி சந்தி யில் களைத்துப்போன நிலை யில் காணப்பட்டதைக்கண்ட நலன் விரும்பியொருவர் இவ ரைக் கைதடி முதியோர் இல் லத்திற்கு நேற்றுமுன்தினம் கொண்டு வந்தார்.

இவர் மீது இரக்கம் கொண்ட கைதடி முதியோர் இல்ல அத் தியட்சகர் மற்றும் உத்தியோகத் தர்கள் இவர் தங்கியிருந்த கிராம சேவையாளர் மற்றும் கிளி நொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு இவரது உண்மை நிலையைக் கண்ட றிந்த பின்னர் கைதடி முதியோர் இல்லத்தில் இவரை இணைத் துக் கொண்டுள்ளனர். (137)

# மாணவ குழுக்களின் பிணக்கு தீர்ந்தது காலம் பிந்திய நடவடிக்கையால் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரம் மற்றும் க.பொ.த சாதாரண வகுப்புக்களைச் சேர்ந்த இரு மாணவ குழுக் களுக்கிடையில் ஏற்பட்ட பிணக்கு அதிபர் அவர் களின் நடவடிக்கையால் சுமுகமாகத் தீர்க்கப் பட்டு சமாதானமாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட இரு மாணவ குழுக்களையும் சேர்ந்த எட்டு மாண வர்களையும் தனித்தனியாக தனது அலுவலகத் திற்கு அழைத்த பாடசாலை அதிபர் அவர் களுக்கிடையிலான பிணக்குகள் குறித்து விசாரணையை நடாத்தினார்.

இதனையடுத்து தவறிழைத்த மாணவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்களுக்கு அதிப ரால வழிகாட்டல் ஆலோசனையும் வழங்கப பட்டது. இதனைத் தொடர்ந்து இரு குழுக் களையும் சேர்ந்த மாணவர்கள் வகுப்பாசி ரியர்களின் முன்னிலையில் சமாதானமாகி ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து மீண் டும் வகுப்புகளுக்குச் சென்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாணவர் களின் முன்னேற்ற அறிக்கையைப் பார்வையிட பாடசாலைக்கு சமூகமளித்திருந்த பெற்றோர்கள் மாணவ குழுக்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த அதிக முயற்சி செய்ய வேண்டியிருந் தது. இதனால் பெற்றோர் மத்தியில் கசப்புணர்வு தோன்றியது.

# "கித்துளக வருண" 2013 தேசிய கண்காட்சி




பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழி காட்டலுக்கு அமைவாக "கித்துளக வருண 2013" தேசிய கண்காட்சியையும், விற்பனைச் சந்தையையும் அமைச்சர் டக் ளஸ தேவானந்தா அவர்களின தும், பிரதியமைச்சர் வீரகுமார திஸநாயக்க அவர்களினதும் அழைப்பின் பேரில் பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ரோஹண ராஜபக்ஷ அவர்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பு - 07 பௌத்த லோக மாவத்தையில் பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்திற்கு முன்பாக அமைந் துள்ள சிங்கள கலாசார சுதரஷி கட்டடத் தொகுதியில் மேற்படி கண்காட்சியும், விற்பனை சந்தையும் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள் ளது.

சித்திரைப் புத்தாண்டு பருவ காலப் பகுதியில் கித்துள் சார்நத உணவு மற்றும் ஏனைய உயர்ந்த தரத்திலான உற்பத்திகளை கண் காட்சி மற்றும் விற்பனைச் சந்தை ஊடாக அறிமுகப்படுத்தி விற்பனை செய்வதின் ஊடாக உற்பத்தியாளர்களது உற்பத்தி களைச் சந்தைப்படுத்துவதறகான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக் கும் அதேவேளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கித்துள் மற்றும் பனை தொழிற்துறை சார்ந்த உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதுடன், அவர்களது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப் பினை ஏற்படுத்திக் கொடுப்ப தும், மக்கள் தமக்குத் தேவை யான பொருட்களை உற்பத்தி யாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வது மட்டுமன்றி, துறை சார்ந்த உற்பத்திப் பொருட்களை தேசிய ரீதியில் அறிமுகப்படுத் துவதுடன், அவற்றுக்கான சந்தை வாய்ப்பினை உள்ளூரி லும் வெளியூரிலும் பெற்றுக் கொடுப்பது இக்கண்காட்சியின் பிரதான நோக்கமாகும்.

கடந்த வருடம் நடைபெற்ற கித்துளக வர்ண கண்காட்சியின் போது 27 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதியமாக கிடைக் கப்பெற்றுள்ளது.

இதனிடையே நாட்டில் 6 இலட்சம் கித்துள் மரங்கள் உள்ள போதிலும் அவற்றில் 15 வீதமானவை மட்டுமே பயன் படுத்தப்பட்டுவரும் நிலையில், எதிர்காலத்தில் அவற்றினை மென்மேலும் விரிவாக்கம் செய்வதே பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் இலக்காகும்.

முன்பதாக இன்றைய நிகழ் வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ரோகண ராஜபக்ஸ அவர்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் வர வேற்றதைத் தொடர்ந்து மங் கள விளக்கேற்றி வைக்கப்பட் டது.

காட்சிக் கூடங்களைத் திறந்து வைத்த அமைச்சர் அவர்கள் அவற்றைப் பார்வையிட்டதுடன் துறைசார்ந்தோருடன் கலந் துரையாடியதுடன் அவர் களுக்கு தமது வாழ்த்துக்களை யும், பாராட்டுக்களையும் தெரி வித்தார்.

இதன்போது நகர அலுவல் கள் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, புரவலர் காசிம் உமர் மற்றும் பாரம்பரிய அமைச்சின் கீழான நிறுவனங் களின் துறைசார்ந்த உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. - லியோ டால்ஸ்டாய்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## படைப்பை மழுங்கடிக்கும் போட்டி

சோமர்செட் மாமின் கதை ஒன்று. ஒரு இளைஞன் மாதா கோயிலுக்குச் சென்று தனக்கு வேலை கேட்டான். மாதா கோயிலில் மணியடிக்கும் வேலையில் அவனை நியமித்தார்கள். சம்பள நாள் அன்று அவனைப் பதிவேட்டில் கையொப்பமிடச் சொன்னபோது தனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்றான். அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்.

அவன் அதே ஊரில் சிறு பெட்டிக்கடை வைத்து வியாபாரத்தை ஆரம்பித்து படிப்படியாக முன்னேறிப் பெரிய பணக்காரனாகிவிட்டான். பெருந் தொழிலதிபராகிவிட்ட அவனைப் பேட்டி காணப் பத்திரிகையிலிருந்து வந்தார்கள். அவர்களது கேள்விகளின் போது தனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பதையும் அவன் சொன்னான். ஆச்சரியப்பட்ட அவர்கள், “எழுதப் படிக்கத் தெரியாமலேயே இவ்வளவு பெரிய ஆளாகியிருக்கிறீர்களே... நீங்கள் மட்டும் படித்திருந்தால் எப்படி ஆகியிருந்திருப்பீர்கள்?” என்றனர்.

“ஒன்றுமில்லை. மாதா கோயிலில் மணியடிப்பவனாக இருந்திருப்பேன்!” என்றான் அந்தப் பணக்காரன்.

நல்ல பள்ளிக்கூடத்தில் சேருவது முதல், வேலை அல்லது வியாபார முயற்சிகள் வரை வாழ்க்கையின் எல்லாக் கூறுகளிலும் மற்றவர்களுடன் போட்டியிட்டு முதல் வரிசையில் இடம் பிடிக்கிறவர்களே முன்னேற முடியுமென்ற எண்ணம் எல்லோரிடமும் உள்ளது. வெற்றி பெறப் போட்டிகள் அவசியமில்லை என்று பீற்றர் தியல் கூறுகிறார்.

இவரும் எல்லாப் போட்டிப் பரீட்சைகளும் எழுதி எழுதி வென்று, கடைசியில், உச்ச நீதிமன்ற வேலைக்கான தகுதிகாண் பரீட்சையில் தோல்வியுற்றவர். அத்துடன் பரீட்சைகள் எழுதுவதை விட்டுவிட்டு பேபால் என்ற இணையத்தளத்தை நிறுவினார். ∴பேஸ்புக் நிறுவனத்திலும் வேறு பல தொழில் நுட்ப நிறுவனங்களிலும் பங்குகளை மலிவாக வாங்கிப் போட்டார். அதனால் இன்று ஒரு கோடீஸ்வரராகி இருப்பவர். உச்ச நீதிமன்றத்தில் பதவி கிடைக்காமல் போனதால் கிடைத்த பலன் இது என்கிறார்.

போட்டி கடுமையாக இருக்கும்போது போட்டியில் கலந்து கொள்ளாமலிருப்பதே நல்லது என்று தியல் கூறுகிறார். அதைவிடப் போட்டிகள் இல்லாத அல்லது குறைவாக இருக்கிற களங்களில் இறங்கிச் சிறு சிறு வெற்றிகளையும் சாதனைகளையும் எட்டுவது மேலானது. பல்லாயிரம் பேருடன் போட்டியிட்டு முதலிடத்தை எட்ட முயலுவதைவிட ஒரு புதுப்புனைவான செயல்திட்டத்தை உருவாக்கி அதில் முதலிடத்திற்கு வருவது சிறப்பு என்பது தியலின் கருத்து.

தற்காலப் போட்டிச் சூழல் படைப்பியல் திறன்களை மழுங்கடிப்பது மட்டுமன்றி தோல்விகள் இளைய தலைமுறையினரிடம் தற்கொலைக்குக்கூடத் தூண்டிவிடும் அளவுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

ஒரு மாணவன் பரீட்சையில் முதலிடம் பெறும் முயற்சியில் எல்லாப் பாடங்களிலிருந்தும் சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டுமே படிக்கிறான். நேரப்பங்கீடு செய்து கொண்டு பழைய கேள்வித் தாள்களிலிருந்தும், துணை நூல்களிலிருந்தும் கேள்விகளைத் தேர்ந்தெடுத்துப் படித்து கூடிய புள்ளிகள் வாங்கும் போட்டியில் இறங்குகிறான். அறிவை விட வெற்றியே முக்கியமானதாகிறது.

மாணவர்கள், எல்லோரும் விரும்பும் துறைகளிலேயே தாங்களும் சேர்ந்து படிக்க விரும்பாமல், தங்களுக்குப் பிடித்த துறை எதுவோ அதை விரும்பித் தேர்ந்தெடுத்துப் படித்து வெல்வது தான் புத்திசாலித்தனம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு துறையில் தோல்வியடைவது தற்கொலைக்கு உகந்த காரணமல்ல. வெற்றியடைய வேறு பல துறைகள் உள்ளன. வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்?

- ஆசிரியர்

# கிழக்கின் முஸ்லிம் இளைஞர்களுக்கு

# பாகிஸ்தானில் ஆயுதப்பயிற்சி

## “ஜிகாத்” எந்த நேரத்திலும் வெடிக்கலாம்

(கொழும்பு)

கிழக்கில் செயற்படும் முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்களுக்கு பாகிஸ்தானில் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டதாகவும், இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்கள் பலர் கிழக்கிற்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள ‘ஜிகாத்’ என்ற புனிதப் போருக்கு எந்த நேரமும் தயாராக உள்ளனர் என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

மேலும் இலங்கையில் நான்கு வகையான இஸ்லாமிய அமைப்புக்கள் இயங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜமாத்தீ இஸ்லாம், தாயுதித் ஜமாத், தாப்லீக் ஜமாத் மற்றும் ஜமாத்தீ முஸ்லிம் ஆகிய இஸ்லாமிய இயக்கங்கள் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்டாட் இதனை அனுப்பி வைத்துள்ளார்.

பாகிஸ்தான் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களால் இலங்கையின் கிழக்குப் பகுதியில் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில இலங்கை முஸ்லிம்கள் வெளிநாடுகளில் ‘ஜிகாத்’ யுத்தத்தில் கலந்து கொள்வதற்காக புறப்பட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏனைய அநேகமானவர்கள் சவுதிஅரேபியாவில் கடயைமாற்றுவதற்கும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

புலிகளுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முஸ்லிம்கள் ஆயுதப் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு அமைப்பான இஸ்லாமிய ஐக்கிய அமைப்பு உறுப்பினர்களிடம் ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் காஷ்மீரில் ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளதாகவும், பாதாள உலகக் குழு உறுப்பினரான தாவூத் இப்ராஹிமுடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் புலிகளுக்கு எதிராக மூன்று முஸ்லிம் குழுக்கள் உருவாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பாதாள உலகக் குழுவினருக்கும், முஸ்லிம் ஆயுததாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் தொடர்பில் திரட்டப்பட்ட அனைத்து தகவல்களும் உறுதிப்படுத்தப்படவை அல்ல என தூதரக அதிகாரிகள் தமது குறிப்பில் தெரிவித்துள்ளனர் என விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

# கொலன்னாவ குப்பை மேட்டில் மக்கள் திரண்டு போராட்டம்

(கொழும்பு)

மீதொட்டுமுல்ல, கொலன்னாவ பகுதியில் நேற்றைய தினம் பதற்ற நிலை ஏற்பட்டது.

இப்பகுதியில் 16 ஏக்கர் காணியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தையடுத்தே இந்தப் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

மீதொட்டுமுல்ல குப்பை கொட்டும் பகுதியில் உள்ள வாசற்பகுதியில் பெருமளவிலான மக்கள் திரண்டதுடன் இவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பகுதியில் குப்பைகள் கொட்டுவதை உடனடியாக நிறுத்துமாறுகூறி மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது அதிகாரிகளை வலியுறுத்தினர்.

மீதொட்டுமுல்ல குப்பைக் கூளத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பினால் இவ் ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இக்குப்பைகூளம் காரணமாக இப்பகுதியை சுற்றியுள்ள 8 கிராமங்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருவதாக மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது.

# வசமாக சிக்கினர் படை அதிகாரிகள் விபசார நிலைய முற்றுகையின் போது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இயங்கிவந்த விபசார நிலையத்தை பொலிஸார் முற்றுகையிட்டு நடத்திய தேடுதலின் போது அங்கு படை உயர் அதிகாரிகள் இருவர் சிக்கிக்கொண்டனர்.

மட்டக்களப்பில் ஹோட்டல் ஒன்றில் விபச்சாரத்தில் ஈடுபட்டு வந்த பெண்கள் மூவரையும், ஆண்கள் மூவரையும் மட்டக்களப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பில் உள்ள ஹோட்டல்களில் விபசார நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக கிடைத்த தகவலையடுத்தே சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டு அவர்களை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வி.இந்திரனின் உத்தரவிற்கமைய நீதிமன்ற அனுமதியுடன் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிஞ்சிலி குணசேகர தலைமையிலான குழுவினர் குறித்த ஹோட்டலை முற்றுகையிட்டு அநாகரிகமான முறையில் இருந்த அறுவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆண்களில் இருவர் படைத்தரப்பில் முக்கிய உயர் பதவிகளை வகிப்பவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் மற்றுமொருவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்த முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவராவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் முஸ்லிம் பெண் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என்றும், சிங்களப் பெண் கந்தளாயைச் சேர்ந்தவர் என்றும், தமிழ்ப் பெண் பருத்திச்சேனையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிக்பொக்கட், சங்கிலி அறுப்பு கட்டுப்படுத்த விசேட பொலிஸ்

யாழில். பிக் பொக்கட் மற்றும் சங்கிலி அறுப்புச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.எம். ஜெவ்றி தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது, கடந்த இரு தினங்களாக யாழில் சிறு குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

ஊர்காவற்துறை மற்றும் வல்வெட்டித்துறை பிரதேசங்களில் இரு சிறு குற்றங்கள் நடைபெற்றதாகவும், அதன் போது, இருவரைக் கைது செய்ததாகவும் அவர் கூறினார்.

யாழ். நகரில் அண்மைக்காலங்களில் பிக்பொக்கட் மற்றும் பெண்களிடம் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் அதிகரித்த போது, அவற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ். பஸ் நிலையம் மற்றும் பல்வேறு இடங்களில் விசேட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதனால் பிக்பொக்கட் மற்றும் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

# தமிழ் மக்களின் நலனில் அக்கறை இல்லாத தலைமை

■ சங்கர சிவன்

இலங்கையின் இனப்பிரச்சினை இன்றோ நேற்றோ தோன்றியதல்ல. அறுபத்தைந்து வருட காலமாகத் தமிழ் அரசியலில் இதுவே பேசுபொருளாக இருக்கின்றது. இந்த அறுபத்தைந்து வருட காலமும் தமிழ் மக்களின் அரசியல் தலைமை காலத்துக்குக் காலம் வெவ்வேறு பெயர்களில் களமிறங்கிய போதிலும் ஒரே பாரம்பரியத்தையும் கருத்து நிலையையும் கொண்டதாகவே உள்ளது. இந்தத் தலைமை இவ்வளவு காலமும் இனப்பிரச்சினையில் மாத்திரமே ஈடுபாடு காட்டிச் செயற்பட்ட போதிலும் பிரச்சினை தீர்வை நோக்கி நகரவே இல்லை. காலத்துக்குக் காலம் புதிய பரிமாணத்துடன் வளர்ந்து வருகின்றது.

இந்த நிலையில் இலங்கைக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக அக்கறை கொள்வதொன்றும் புதுமையானதல்ல. ஆனால், அந்த அக்கறை பிரச்சினையின் தீர்வுக்கு வழிவகுப்பதாக இருக்கவேண்டுமேயொழிய பிரச்சினையை மேலும் மோசமாக்குவதாக இருக்கக்கூடாது. நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை இலங்கைத் தமிழர்கள் மீது திணிப்பதாகவே வெளிநாட்டுத் தமிழர்களின் அக்கறை பெரும்பாலும் இருந்து வருகின்றது. இந்த வகையிலேயே தமிழகத்தின் இன்றைய போராட்டங்களும் சட்ட சபைத் தீர்மானங்களும் அமைந்திருக்கின்றன.

தமிழக மாணவர்களின் போராட்டம், சட்ட சபையின் தீர்மானங்கள், திரைப்பட சமூகத்தின் உண்ணாவிரதம் என்ற அனைத்தும் தமிழீழம் என்ற ஒரே அச்சிலேயே சுழல்கின்றன. இது நடைமுறைச் சாத்தியமானதா என்பது பற்றியோ இக்கோரிக்கையின் விளைவாக மூன்று தசாப்த காலத்தில் ஏராளம் அரசியல் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும், இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களும் அநியாயமாக உயிர்ப்பலி ஆகியது பற்றியோ இவர்களுக்குச் சிறிதளவேனும் அக்கறை இல்லை. இலங்கையின் சமகால நிலைமை பற்றியோ இனப்பிரச்சினையின் வரலாறு பற்றியோ அறிந்து கொள்ளும் ஆர்வம் கொஞ்சமும் இவர்களுக்கு இல்லை.

தமிழக 'எழுச்சி'யின் சாராம்சத்தை இவ்வாறு கூறலாம். தமிழீழம் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணை, இலங்கையைப் பகை நாடாக இந்தியா பிரகடனப்படுத்தல், தமிழீழத்துக்கான சர்வசன வாக்கெடுப்பு, தமிழ் நாட்டு மண்ணில் நின்று எவ்வளவு தான் ஆரவாரம் செய்தாலும் தங்களால் இவற்றைச் செய்ய முடியாது என்பதால் இந்திய அரசாங்கம் இவற்றைச்செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்கள். இந்த வற்புறுத்தலுக்காகவே இவ்வளவு போராட்டங்களும், சட்ட சபைத் தீர்மானங்களும்.

தமிழ் நாட்டுப் போராட்டத்தின் கோரிக்கைகளை இந்திய அரசாங்கம் நடைமுறைப் படுத்துவது சாத்தியமில்லை என்பதையோ இக்கோரிக்கைகள் இந்தியாவின் தேச நலனுக்குக் குந்தகமானவை என்பதையோ விளக்குவதற்கு இக்கட்டுரை முற்படவில்லை. இந்தக் கோரிக்கைகள் மூலம் போராட்டப் பூனைக்குட்டி கோணிப் பையிலிருந்து வெளியே குதித்துவிட்டது.

இலங்கைத் தமிழருக்கு உரிய வகையில் உதவி புரியவில்லை என்பது காங்கிரஸ் அரசாங்கத்துக்கு எதிராகத் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்படும் பிரதான பிரசாரம். அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவிருக்கின்றது. அத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான பிரசாரத்துக்காகவே போராட்டமும் கோரிக்கைகளும் திட்டமிடப்பட்டன. இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவானவை என்ற வெளித்தோற்றத்தில் இந்திய அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்த இயலாத கோரிக்கைகளை முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலில் அவற்றையே காங்கிரஸ் கட்சிக்கு எதிரான பிரதான பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சக்தி பின்னணியிலிருந்து இப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது. அந்த அலை வேகமாக வீசத் தொடங்கியதும் மற்றவர்களும் அதில் இணைந்து கொண்டார்கள்.

தமிழ் நாட்டுப்போராட்ட அலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு ஒரு சவாலாக அமைந்தது என இலங்கை அரசியல் நோக்கர்கள் கருதினார்கள். தனிநாடு தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற அடிப்படையிலேயே தமிழ் நாட்டுப் போராட்டங்களும் சட்ட சபைத் தீர்மானங்களும் இருந்தன. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று அடிக்கடி கூறி-வரும் கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் நாட்டுப் போராட்டத்தையும் தனிநாடு என்ற அதன் முடிவையும் எப்படி நோக்கப்போகின்றார்கள் என்ற கேள்விக்கு இப்போது பதில் கிடைத்திருக்கின்றது.

தமிழ் நாட்டுப் போராட்டத்தையும் சட்ட சபையின் தீர்மானங்களையும் வரவேற்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சில தினங்களுக்கு முன் கூறியிருக்கின்றார். அவர் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் என்பதால் அவரது கருத்தைக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவே கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தமிழ் நாட்டுப் போராட்டம் கூறுவது போலத் தனிநாடு தான் தீர்வு என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு ஆகின்றது. தமிழ் நாட்டுப் போராட்டத்தையும் சட்ட சபையின் தீர்மானங்களையும் வரவேற்பதாகக் கூறுவதன் உண்மையான அர்த்தம் இதுவே. நான்கு வருடங்களாக மௌனம் காத்த மூடுமந்திரம் இப்போது வெளியே வந்துவிட்டது.

புலிகளின் தோல்விக்குப் பிந்திய நான்கு வருட காலத்தில் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசியல் தீர்வு என்று கூறி மக்களை ஏமாற்றி வந்திருக்கின்றார்கள். அரசியல் தீர்வுதான் உங்கள் நிலைப்பாடொன்றால் தீர்வுத் திட்டத்தை முன்வையுங்கள் என்று எதிர்க்கட்சியினரும் அரசியல் விமர்சகர்களும் கூறிவந்தபோதிலும் கூட்டமைப்பு தீர்வுத் திட்டத்தை முன்வைக்காததற்கான உண்மையான காரணம் இப்போது தெரிகின்றது. கூட்டமைப்பின் உண்மையான நோக்கம் தனிநாடாக இருக்கையில் எப்படி அரசியல் தீர்வுக்கான திட்டத்தை முன்வைப்பது?

சாத்வீக வழியில் இலங்கையில் தனிநாடு அமைவது ஒருபோதும் சாத்தியமில்லை. ஆயுதப் போராட்டம் என்ற பேச்சுக்கே இப்போது இடமில்லை. ஆயுதப் போராட்டத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும் அழிவுகளும் கொஞ்சநஞ்சமல்ல. தீர்க்க தரிசனமற்ற தனிநாட்டுக் கோரிக்கையினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு மேலதிகமாக இக் கோரிக்கை இனப்பிரச்சினையை மோசமான அளவுக்கு வளர்த்துவிட்டது. இந்த நிலையில் யாருடைய நன்மைக்காகத் தனிநாட்டுக் கோரிக்கை?

அரசியல் தீர்வுக்கான ஆக்கபூர்வ முயற்சியில் ஈடுபடுவதற்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் தயாராக இல்லை. சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் கைவிரல் நூல்களின் அசைவுகளுக்கு ஏற்ப ஆடிக்கொண்டிருக்கும் பொம்மலாட்டக் காரர்களே இத்தலைவர்கள். இலங்கையில் இனப் பிரச்சினை தீர்வதில் இப்புலம் பெயர் அமைப்புகளுக்கு இஷ்டமில்லை. அவர்களின் சுகபோக வாழ்க்கையை உறுதிப்படுத்துவற்கு இங்கே இனப் பிரச்சினை கொதிநிலையில் இருக்க வேண்டும். தங்கள் உறவுகளை மேற்குலகச் சொகுசு வாழ்க்கைக்கு அழைப்பதற்கும் இங்கு இனப்பிரச்சினை தீராமலிருக்க வேண்டும். ஆனால், இப்புலம் பெயர் அமைப்புகளின் கட்டளைப்படி கூட்டமைப்பு அரசியல் தீர்வைத் தவிர்த்துத் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றது. இதனால், பாதிக்கப்படுபவர்கள் யார்? பலனடைபவர்கள் யார்?

இலங்கையில் தனிநாடு சாத்தியமில்லை. அந்த முயற்சியின் விளைவாகத் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பல பாதிப்புகள் ஏற்பட இடமுண்டு. இனப்பிரச்சினை தீராமலிருப்பதன் விளைவாகத் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் நெருக்கடிகள் அரசியல் தீர்வு தள்ளிப் போவதன் மூலம் அதிகரிக்கலாமேயொழியக் குறைவதற்கு இடமில்லை. தனிநாட்டு நிகழ்ச்சி நிரல் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு நெருக்கடியையே தோற்றுவிக்கும். ஆனால், அந்த நெருக்கடி தலைவர்களின் குடும்பங்களுக்கு இல்லை. அவர்கள் வெளிநாடுகளில் சுகபோகத்துடன் வாழ்கின்றார்கள். தலைவர்களுக்கும் பாதிப்பு இல்லை. தமிழ் மக்களின் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் பற்றிப் பேசிப் பேசியே நாடாளுமன்றப் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளலாம். மக்களின் நெருக்கடிகளும், பிரச்சினைகளும் எவ்வளவுக்குத் தொடர்கின்றனவோ அவ்வளவுக்கு இவர்களின் நாடாளுமன்றப் பதவிகளுக்கு உத்தரவாதம் உண்டு. பாதிக்கப்படுபவர்கள் சாதாரண தமிழ் மக்களே. இது தான் சுயநல அரசியல்.

கூட்டமைப்புத் தலைவர்கள் உண்மையிலேயே தமிழ் மக்களின் நலனில் அக்கறை உடையவர்களொன்றால் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலிலிருந்து விடுபட்டு அரசியல் தீர்வை அடைவதற்கு உண்மையாக உழைக்க வேண்டும். அதற்கு அவர்கள் முதலில் செய்ய வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தனிநாடு தீர்வல்ல என்றும் தமிழ் நாட்டுப் போராட்டம் அரசியல் தீர்வுக்குக் குந்தகமானது என்றும் பகிரங்கமாகக் கூறுவது ஒரு விடயம். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது மற்றைய விடயம். ●



**தமிழக மாணவர்களின் போராட்டம், சட்ட சபையின் தீர்மானங்கள், திரைப்பட சமூகத்தின் உண்ணாவிரதம் என்ற அனைத்தும் தமிழீழம் என்ற ஒரே அச்சிலேயே சுழல்கின்றன. இது நடைமுறைச் சாத்தியமானதா என்பது பற்றியோ இக்கோரிக்கையின் விளைவாக மூன்று தசாப்த காலத்தில் ஏராளம் அரசியல் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும், இலட்சக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களும் அநியாயமாக உயிர்ப்பலி ஆகியது பற்றியோ இவர்களுக்குச் சிறிதள வேனும் அக்கறை இல்லை. இலங்கையின் சமகால நிலைமை பற்றியோ இனப்பிரச்சினையின் வரலாறு பற்றியோ அறிந்து கொள்ளும் ஆர்வம் கொஞ்சமும் இவர்களுக்கு இல்லை.**

# மத சுதந்திரத்துக்கு ஆப்புவைப்போருக்கு அரசியல் ஆதரவு பெருகுகிறது

## கிறிஸ்தவர்கள் மீதும் வன்முறை தாவும் அபாயம்

கடந்த சில மாதங்களாக முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் தங்களின் மத அனுஸ்டானங்கள் சம்பந்தப்பட்டவைகளில் பலவித தாக்குதலுக்கு உள்ளான சம்பவத்தினை தாம் கண்டிப்பதாக இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேசு ஐக்கியத்துவம் அமைப்பு தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் பெரும்பான்மை அல்லாத சமயத்தை பின்பற்றுவோருக்கெதிராக முன்னெடுக்கப்படும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அத்துடன் முஸ்லிம் மதத்தினருக்கு சொந்தமான வியாபார ஸ்தாபனங்கள் தாக்குதலுக்கு உள்ளானதோடு, முஸ்லிம் பெண்கள் தங்களின் மதசார்பான உடையுடன் செல்லும்போது தாக்குதலுக்கும் அசௌகரியத்துக்கும் உள்ளானார்கள்.

இத்தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டோருக்குத் தண்டனை அமுல்படுத்தப்படவில்லை. பல சம்பவங்களுக்கு புகைப்பட, வீடியோ ஆதாரங்களிருந்தும், பல சம்பவங்கள் கண்ணெதிரே நடைப்பெற்ற போதும், இச் சம்பவங்களில் ஈடுபட்டோர் கைது செய்யப்படவோ, தண்டனைகள் வழங்கப்படவோ இல்லை. சிறுபான்மை மதத்தினரின் மனித உரிமைகள், சுதந்திரம், மத உரிமை, கலாசாரம், பொருளாதாரம் என்பவைகள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டபோது சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அதிகாரிகள் பலர் பாராமுகத்துடன் அலட்சியமாக செயற்பட்டார்கள்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலான யுத்தத்திற்கு பின்னால் ஐக்கியத்தையும் ஒப்புரவையும் நோக்கிய இலங்கையின் பயணத்தில் சிறுபான்மையினருக்கெதிரான அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும் தொடர எவ்விதத்திலும் இடமளிக்கக் கூடாது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவின் முன்னிலையில் கூறப்பட்டவைகளில் இரண்டு நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த இலங்கை கால அவகாசம் கேட்டுள்ள நிலையில் இவ்விதமான சிறுபான்மையினருக்கெதிரான அச்சுறுத்தல்களும், தாக்கங்களும் இலங்கையின் நம்பிக்கையைக் குறைத்து, கோரப்பட்ட காலஅவகாச வேண்டுகோளைப் போலியானதொன்றாகவும் அமைக்கிறது. இச்சம்பவங்களில் இரண்டு பயமுறுத்தும் காரணிகளைக் காணலாம். முதலாவது இத்தாக்குதல்கள் இரண்டு குழுவினரால் ஒழுங்குப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுகிறதாகத் தெரிகின்றது. அதனால் இக்குழுக்கள் தொடர்ந்து செயற்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இரண்டாவது காரணி, இவ்விரண்டு குழுக்களும் அதிகாரிகளின் ஆதரவையும், தயவையும் பெற்றிருப்பதால் தண்டனைக்குட்படாதபடி செயற்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள் எனவும் தெரிகின்றது. இ.தே.கி.சு.ஐ இந்நிலையில் இயேசு கிறிஸ்து தன்னை குற்றம் சாட்டினவர்களுக்கு முன்பாக சத்தம் இடாதிருந்த ஆட்டைப்போல இருந்ததை உயிர்த்த ஞாயிறு தினத்தை சில நாட்களுக்கு முன் நினைவுகூர்ந்த கிறிஸ்தவர்களுக்கு நினைவுபடுத்துகின்றோம்.

இலங்கை யாப்பின் படி வழங்கப்பட்டுள்ள மனித உரிமைகளை அனுபவிக்கப் போராடுவதோடு, அவரைப்போலவே நாமும் எமக்கு எதிராக குற்றம் செய்பவர்களுக்கு எதிராக இப்போதும், இனியும் பதில் தாக்குதல் தொடுக்கமாட்டோம். எனினும், இ.தே.கி.சு.ஐ ஆனது பல மத, கலாசார சமூகத்தின் சமத்துவத்தைப் பேணுவதில் இலங்கை அரசாங்கமானது தனது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூற வேண்டுமெனவும், தீவிரவாதக் குழுக்களை ஆதரிக்கும் நடவடிக்கைகளையும், ஆதரிக்கும் பேச்சுக்களையும், அரசியல் ஆதரவுகளையும் தவிர்க்கும் படியும், சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அதிகாரிகள் பெரும்பான்மையினருக்கு ஆதரவு அளிப்பதை தவிர்க்கும்படியும், சட்டத்தை நிலை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டுமாறும் வலியுறுத்துகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கம்பி எண்ணும் பணிப்பாளர்கள்

லக்சலுசல நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு தலா ஆறு மாதகால சிறைத் தண்டனை விதிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. 'லக சலுசல' நிறுவனத்தின் சுமார் 650 ஊழியர்களின் சேமலாப நிதி செலுத்தப்படாமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'லக் சலுசல' நிறுவனப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் தேசிய அடையாள அட்டை இலக்கங்களை நீதிமன்றில் அறிவிக்குமாறும், கொழும்பு மேலதிக நீதவான் இதன் போது கட்டளை பிறப்பித்துள்ளார்.

'லக் சலுசல' நிறுவனத்திற்கு எதிராக இந்த வழக்கு தொழில் ஆணையாளரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் காரணமாக 150 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படவில்லை என்று இதன்போது ஊழியர்கள் சார்பில் ஆஜரான சட்டத் தரணி சரத் சொய்ஸா நீதி மன்றத்திற்கு அறிவித்தார்.

## ஜப்பானியப் பிரஜை சுங்க அதிகாரியிடம் சிக்கினார்

ஒரு கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள்கள் என்பவற்றை நாட்டில் இருந்து கடத்த முயன்ற ஜப்பான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுங்க அதிகாரிகள் குறித்த நபரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

இவரிடம் இருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்களின் பெறுமதி 30 இலட்சம் ரூபா என இதுவரை கணிப்பிடப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர், சுங்க அதிகாரி லெஸ்லி காமினி தெரிவித்தார். இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

## காலாவதியாகிய வெளியுறவுக் கொள்கை உடனடித் தேவை மீளாய்வு

### அரசிடம் கோருகிறது ஐ.தே.க.



(கொழும்பு)

நாட்டின் வெளியுறவுக் கொள்கையை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. அதேவேளை, இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சியின் எச்சரிக்கையை உதாசீனம் செய்துவிட முடியாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கைத் தமிழர் உரிமைப் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால், தனி ஈழ இராச்சியத்திற்கு ஆதரவளிக்க நேரிடும் என பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் யஸ்வந்த் சின்ஷா தெரிவித்திருந்தார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வினை வழங்காமையே, இந்தியா தலையீடு செய்யக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியை விடவும் பாரதீய ஜனதாக் கட்சி கடும் போக்கான மதவாத சிந்தனைகளைக் கொண்ட கட்சி எனவும், அந்தக் கட்சியின் எச்சரிக்கையை உதாசீனம் செய்யக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் தடவையாக இந்தியாவின் பிரதான அரசியல் கட்சியொன்று பகிரங்கமாக ஈழம் அமைப்பது குறித்து கருத்து ளியிட்டுள்ளதாகவும், இது ஆரோக்கியமான நிலைமை கிடையாது எனவும் அவர் சுட்டிக காட்டியுள்ளார். யுத்தம் முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மையினத்தவருக்கும் உரிய முறையில் அரசாங்கம் சலுகைகளை வழங்கத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டின் தற்போதைய வெளியுறவுக் கொள்கைகளைப் துரித கதியில் மீளாய்வு செய்து பொருத்தமானவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

## இந்திய மீனவர்களின் ஊடுருவல் ஊர்காவற்றுறை வரை

(கொழும்பு)

தோடியக்கரை அருகே 5 விசைப்படகுகளில் ஊர்காவற்றுறைப் பகுதியில் மீன்படித்துக் கொண்டிருந்த பட்டினச்சேரி பகுதியைச் சேர்ந்த 26 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு காரைநகர் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் அதிகாரி கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோர் மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த மீனவர்கள் தற்போது ஊர்காவற்றுறைப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கூறினார்.

## இந்தியப் பொருட்களை இறக்க துறைமுக தொழிலாளர் பின்னடிப்பு

### நெருக்கடியை சமாளிக்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

இந்தியப் பொருட்களை ஏற்றி இறக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்! அதில் எவ்வித தடைகளும் இல்லையென அமைச்சர் ரோஷித அபேகுணவர்தன அறிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் இருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்படும் பொருட்களையும், தமிழ் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களையும் ஏற்றி இறக்குவதை நிறுத்தப் போவதாக துறைமுக ஊழியர் சங்கமொன்று ஏற்கனவே அறிவித்திருந்தது.

மேலும் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுக பிரதான வாயிலுக்கருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே கொழும்புத் துறைமுகத்தில் இந்தியப் பொருட்களை ஏற்றி இறக்கும் நடவடிக்கைகள் வழமைபோல் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் கருத்துத்திட்ட அமைச்சர் ரோஷித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது இந்தியப் பொருட்களை ஏற்றி இறக்காதிருக்க துறைமுக அதிகார சபை எந்தவித முடிவும் எடுக்கவில்லை என்பதை பொறுப்புடன் அறிவிக்கிறேன். கொழும்புத் துறைமுகத்தில் இந்தியப் பொருட்களை ஏற்றி இறக்கும் நடவடிக்கைகள் வழமை போல் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசிய முன்னணியின் அங்குரார்ப்பண மாநாடு

"தமிழ்த்தேசிய முன்னணி" எனும் அரசியல் கட்சியின் அங்குரார்ப்பண மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளது என்று அக்கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. வவுனியா மகாறம்பைக்குளம் வீதி, பூந்தோட்டம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அக் கட்சியின் தலைமைஅலுவலகத்தில் இம் மாநாடு காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதன்போது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்படவுள்ளதுடன் பிரதேச அமைப்புகள், மாவட்ட அமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் ஜனகன் தெரிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(07.04.2013 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 25 ஆம் திகதி. நட்சத்திரம் சதயம். முன்இரவு 08.35 வரை. திதி துவாதசி பி.ப. 04.37 வரை. இராகுகாலம் 04.37 - 06.07 வரை. சுபநேரம் 09.07 - 10.37 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** முன்னர் செய்த உதவிக்கு நற்பலன் தேடி வரும். மனதில் புதிய உற்சாகம். தொழில், வளர்ச்சியில், முன்னேற்றம் காண்பீர்கள். சராசரி பணவரவுடன், கடன் வசூலாகும். தெய்வ வழிபாடு நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினருடன் இன்பமாய் நாள் கழியும்.

**ரிஷபம்** வாழ்வில் பெருமை கொள்ளத்தக்க இனிமையான அனுபவங்கள். தொழில், கூடுதல் வளர்ச்சி ஏற்படும். உபரி வருமானம். விரும்பிய பொருள் வாங்குவீர்கள். அரசியல் தொடர்பில் எதிர்பார்ப்பு நிறைவேற அனுகூலம். புத்திரர் நற்செய்தி.

**மிதுனம்** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தரக்கூடாது. தொழில், செழிக்க, கூடுதல் உழைப்பு. முக்கிய செலவுகளுக்கு பணம் கிடைக்கும். உங்கள் அன்புக்குப் பலரும் மயங்குவர். வழிபாடு மனதை இலகுவாக்கும். பிள்ளைகள் மூலம் பெருமையுணர்வு.

**கடகம்** சோதனைகளை வென்று சாதனை. மனதில் இருந்த குழப்பம் விலகும். தொழில் வளர்ச்சியால், கூடுதல் கௌரவம் பெறுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். அறப்பணி செய்து மகிழ்வீர்கள். தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும்.

**சிம்மம்** உங்களுக்கு இடையூறு தருபவரை அறிவீர்கள். பெருந்தன்மையுடன் விலகி, சிரமம் தவிர்க்கலாம். தொழில், மந்தகதியில் இயங்கும். சிக்கனம் நல்லது. போட்டியில் வெல்லும் முயற்சிகளை எடுப்பீர்கள். வாகன பயணத்தில் கவனம் வேண்டும்.

**கன்னி** முக்கிய வேலை ஒன்று நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். நலம் விரும்புவோரின், ஆலோசனை கேட்டு செயல்படுவது நல்லது. தொழில், அளவான மூலதனம போதும். வரவை விட செலவு கூடும். அதிகாரிகளோடு சச்சரவு வேண்டாம். அசதி இருக்கும்.

**துலாம்** முன்யோசனையுடன் நடந்து சிரமமான வேலைகளும் முடிப்பீர்கள். எதிர்பார்த்த பலன் கிடைக்கும். தொழில், நடைமுறை சீராகும். உபரி வருமானம் கிடைக்கும். வீட்டுப் பொருட்கள் வாங்குவீர்கள். குடும்பத்தினர் அனுசரணையாக நடந்துகொள்வர்.

**விருச்சிகம்** உங்களை, சிலர் குறை கூறுவர். தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழில், சராசரி அளவில். கூடுதல் முயற்சியினால், பணவரவு. விலை மதிப்புள்ள பொருள், பிறர் பொறுப்பில் தரவேண்டாம். குடும்பத்திற்காக அதிகநேரம் செலவு.

**தனுசு** அடுத்தவரின் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். குடும்பத் தேவை பூர்த்தியாகும். தொழில், இடையூறை சரிசெய்வது, வளர்ச்சியை உறுதிப்படுத்தும். வரவை விட செலவு அதிகரிக்கும். நண்பர்கள் உதவுவர். ஓய்வு உடல்நலம் காக்கும்.

**மகரம்** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை கேட்டு செயற்படுவீர்கள். முக்கிய பணி எளிதாக நிறைவேறும். தொழில், நல்ல முன்னேற்றம் உண்டு. ஆதாய பணவரவு. உத்தியோகத்தர் பாராட்டு, சலுகைப்பயன் பெறுவர். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும்.

**கும்பம்** நீண்ட நாள் எதிர்பார்ப்புக்கு அனுகூல செய்தி கிடைக்கும். வேலைகளில் உத்வேகம். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவு திருப்தி. விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். குடும்பத்தினரிடம் பரிவுடன் நடந்துகொள்வீர்கள்.

**மீனம்** உறவினரின் அன்புத்தொல்லை இருக்கும். தொழிலில், வேலைச்சுமை. மிதமான அளவில் பணவரவு. உடல் ஆரோக்கியத்திற்கு உணவு கவனம். விலையுயர்ந்த பொருட்களை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். குடும்பத்தினருடன் பாசம்.

# இரணைமடு குடிநீர்த் திட்டம் தீவிரம்

# விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படும்



இரணைமடு-யாழ்ப்பாணம் குடிநீர்த் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுத்தப்படுகின்ற போது கிளிநொச்சி விவசாயிகள் மற்றும் பொது மக்களின் நலன்கள் முழு அளவில் பாதுகாக்கப்படும் என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குனவர்தன மற்றும் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்ட கிளிநொச்சி குடிநீர் விநியோக திட்டம் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. இதன் போது கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்த்தேவையை நிறைவு செய்த பின்னரே யாழ்ப்பாணத்திற்காகன குடிநீரை வழங்க முடியும் என விவசாயிகளும், கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். அதற்குப் பதிலளிகும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரணைமடு-யாழ்ப்பாணம் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப் படுகின்ற போது இரணைமடுக் குளம் தற்போது உள்ள 34 அடி நீர் கொள்ளளவு 36 அடியாக மாற்றப்பட்டு சேமிக்கப் படுகின்ற மேலதிக நீரையே குடிநீராக கொண்டு செல்லப் படும். அத்தோடு இரணைமடுக் குளத்திற்குக் கீழான எல்லா நீர்ப்பாசன வாய்கால்களும் நிரந்தரமாக புனரமைக்கபடுவதோடு விவசாயவீதிகளும் புனரமைக்கப்படும் மேலும் கிளிநொச்சி நகரும் நகரை அண்டிய பிரதேசமும் உள்ளடங்கலாக அறிவியல் நகர் பொறியியல் பீடத்திலிருந்து பரந்தன் வரையான 13 கிராம அலுவலர் பிரிவுகள் குடிநீர் வழங்கும் திட்டத்திற்குள் உள்வாங்கப்படும் என்றார்.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ்குனவர்தன,பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளர் அபயகுனசேகர, பிரதிச் செயலாளர் ஜெயமால, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கருனாசேன, ஹெட்டியாராச்சி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொதுமுகாமையாளர் லால் பிறேமானந்த, பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் கபில ஜயசேகர, மாகாண, மாவட்ட உயரதிகாரிகள் பிரதேச செயலாளர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# பொக்குடையான் குளம் புனரமைக்க 150 இலட்சம் ரூபா ஒதுக்கப்படும்

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள் நாடாளுமன்றக் குழுக்கூட்டங்களை யாழ்., கிளிநொச்சி மக்களின் நலன்களுக்காகவும், அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும், பயன்படுத்தி வருகின்றவர் அவர் எப்பொழுதும் யாழ். கிளிநொச்சி மக்களின் நலன்களில் அதிக அக்கறையோடு செயற்பட்டு வருகின்றவர். குறிப்பாக அவர் கேட்டுக்கொண்டமைக்கு அமைவாக பூநகரி மளாப்பு பொக்குடையான் குளத்தினைப் புனரமைத்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையின் ஆரம்ப கட்ட பணிகளுக்காக 150 இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்து தருவதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்தன அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி குடிநீர் விநியோகத் திட்டம் தொடர்பான கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிகையில்,

எப்பொழுதும் மக்களின் நலன்களில் அதிக அக்கறையோடு செயற்படும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை இந்தப் பிரதேச மக்கள் பெற்றுள்ளார்கள். எனவே இவ்வாறானவர்களினாலேயே மக்களுக்கு சிறப்பாக சேவை செய்யமுடியும் இவரது மக்கள் சேவைக்கு நாடாளுமன்ற பிரதிக்குழுக்களின் தவிசாளர் எனற பதவியும் முக்கிய பங்கு வகிக்கின்றது எனத் தெரிவித்த அமைச்சர அவர்கள், இவர் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் தேவைகள் தொடர்பில் எங்கள் மத்தியில் வைக்கின்ற கோரிக்கைகளையும் நாம் விருப்போடு நிறை வேற்றி வைத்து வருகின்றோம். இன்று பல கோரிக்கைகளை எம்முன் வைத்துள்ளார். பல கிராமங்களின் குடிநீர் தேவையினைப் பூர்த்தி செய்து தருமாறு சந்திரகுமார் அவர்கள் கேட்டுள்ளார்.

எனவே அவரின் கோரிக்கைகளை நாம் கவனத்தில் எடுத்து செயற்படுவோம். அதற்கான பணிப்புரைகளை நான் எனது அதிகாரிகளுக்கு விடுப்பேன் என்றார்.

## 6 அதிகாரிகளுக்கு புலமைப்பரிசில்

(கிளிநொச்சி)

வட மாகாணத்திலிருந்து 6 அகில இலங்கை சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் திட்டமிடல் தொடர்பான 12 நாள் பயிற்சி நெறியொன்றை நிறைவு செய்து நாடு திரும்பி உள்ளார்கள். 'சிறிலங்கா டெலிகேசன்' எனும் அமைப்பினால் வழங்கப்பட்ட இப் புலமைப்பரிசில் மூலம் இலங்கையிலிருந்து 12 பேர் சீனா சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது. கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி, கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சிறிரங்கன், நானாட்டான், செட்டிகுளம் வெலிஓயா பிரதேச செயலாளர்கள் ஆகிய ஆறு அதிகாரிகளுமே இவ் விதம் புலமைப்பரிசில் மூலம் சீனா சென்று வந்தவர்களாவர்.

(90)




— மூலபாரதி

## தூண்டில்


ஜெனிவா என்பது தொடர்கதை
ஜனத்தைக் கவரும் விதமாக
கனிவா முடிவைப் புதிருடன்
காத்திட வைக்கும் தந்திரமாம்!

போன தொடரின் முடிவையும்
பாத்தி ருக்க வைத்துமாம்
பான லாகிரித் தன்மையால்
பாசாங் குவிட்ட கன்றதே!

இவ்வரு டத்தொடர் வளர்ந்திட
இலாவக மாய்மறு வருடமும்
பவ்விய மர்மத் தூண்டிலை
போட்டு நிறுத்திக் கொண்டதே!

# வீரர்களின் போர் வாகைசூடியது மகாஜனா






(சுன்னாகம்)

'வீரர்களின் போர்' என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 78 ஓட்டங்களால் அபாரமான வெற்றிபெற்றது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்குமிடையிலான 13ஆவது வீரர்களின் போர் நேற்றும், நேற்று முன்தினமும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 63 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி, ஜெனக்ஷனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டபோதும், மறுமுனையில் மிக நிதானமாக ஆடி அணிக்கு ஓட்ட எண்ணிக்கையை மயூரன் அதிகரித்தார். இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மயூரன் 50 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சுபதீபன் 09, டிலோஜன் 09, சாரங்கன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஜெனக்ஷன் 32 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார். மற்றும் நிரோஜன் இரண்டு, கானுஜன், சிந்துஜன், றொசான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.



ஜெனந்தன்



ஜெனக்ஷன்

பதிலுக்கு 157 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி, மகாஜனாக் கல்லூரி அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. முதலாவது ஓவரின் இரண்டாவது பந்தில் முதலாவது விக்கெட்டை இழந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தொடர்ந்து 2, 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துத் தடுமாறியது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த கானுஜன், றொபேட் நிசாத் இணை சிறிது நேரம் தாக்குப் பிடித்தது. இந்த ஜோடி 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து கானுஜனுடன் இணைந்த ஜெனக்ஷன் அணியை சரிவிலிருந்து மீட்கப் போராடினார். இந்த ஜோடியின் ஆட்டம் போட்டியின் திருப்பு முனையாக அமையும் அளவிற்கு நிதானமாக இருந்தது. இருப்பினும் ரமேஸ்குமாரால் இந்த இணை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாது திணறிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 13ஆவது வீரர்களின் போரை மகாஜனாக் கல்லூரி அணி 78 ஓட்டங்களால் வெற்றிகொண்டது. துடுப்பாட்டத்தில் கானுஜன் 54 பந்துகளை எதிர்கொண்டு 22, ஜெனக்ஷன் 38 பந்துகளை எதிர்கொண்டு 16, சயந்தன் 18 பந்துகளை எதிர்கொண்டு 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனந்தன் 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, கஜந்தன் 28 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, ரமேஸ்குமார் 31 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். மகாஜனாக் கல்லூரி முதல் இனிங்ஸ் 126. ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல் இனிங்ஸ் 63.



றொசான்




பிரசாத்

போட்டியின் ஆட்டநாயகனாக மகாஜனாக் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜெனந்தன், சிறந்த பந்து வீச்சாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜெனக்ஷன், சிறந்த களத்தடுப்பாளராக அதே அணியைச் சேர்ந்த றொசான், சிறந்த துடுப்பாட்ட வீரராக மகாஜனாக் கல்லூரி அணியைச் சேர்ந்த பிரசாத், சிறந்த சகலதுறை வீரராக அதே அணியைச் சேர்ந்த கஜந்தன் தெரிவு செய்யப்பட்டனர். இதேவேளை, இப்போட்டியை வென்றதன் மூலம் வெற்றி எண்ணிக்கையை மகாஜனாக் கல்லூரி அணி சமன் செய்துள்ளது. 13ஆவது தடவையாக இடம்பெற்றுள்ள இப்போட்டித் தொடரில் இரு அணிகளும் இதுவரை மூன்று வெற்றிகளைப் பதிவாக்கியுள்ளனர். இப்போட்டி நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தைச்சேர்ந்த உயர் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பயிற்றுவிப்பாளர்கள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(93,42)



வெற்றிக்களியாட்டம்



கஜந்தன்



# இறுதி நேரத்தில் வென்றது ராஜஸ்தான்

(டில்லி)

ராகுல் ராவிட், கூப்பர் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் ராஜஸ்தான் றோயல் அணி இறுதி நேரத்தில் வெற்றியைப் பதிவாக்கிக் கொண்டது.. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் ஆடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய குசல் பெரரா, ரகானே இணை அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இருப்பினும் இந்த ஜோடி 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய கப்டன் ராகுல் ராவிட் மிக நிதானமாக ஆடி-னார். மறுமுனையில் ரகானே 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த பின்னி, ராவிட்டுடன் இணைந்து ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் ராகுல் ராவிட் 51 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 65, பின்னி 20 ப்ந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், பவுண்டரிகள் அடங்கலாக 40, ரகானே 28, குசல் பேரரா 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில்

இரண்டு

யாதேவ் 24

ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி டேர்டெவில்ஸ் அணி ஆரம்பத்தில் நிதானமாக ஆடியது. 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து களமிறங்கிய கப்டன் மஹேல ஜெயவர்த்தன சிறிது நேரம் தாக்குப் பிடித்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சன்ட் ஒரு முனையில் நிதானமாக ஆட மறுமுனையில் டேவிட் வோனர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இருப்பினும் இறுதி நேரத்தில் 57 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை; இந்த இணை பிரிக்கப்பட்டது. தொடர்ந்தும் டேவிட் வோனர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தமை டில்லி அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. அத்துடன் ஆட்டமும் பரபரப்படைந்ததுடன் டில்லி அணியின் வெற்றிவாய்ப்பும் மெல்ல மெல்லப் பறிபோனது. இறுதியில் டில்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து

160


ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் டேவிட் வோனர் 56 பந்துகளை எதிர்கொண்டு

ஒன்பது

பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 77, சன்ட் 23, மஹேல ஜெயவர்த்தன 19, பின்னி 20 ஓட்டங்களைப்

பெற்றனர்.

இறுதி ஓவர்களை சிறப்பான முறையில் வீசிய கூப்பர் மூன்று விக்கெட்டுக்களைச் சாய்த்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார். போட்டியின் ஆட்டநாயகனாக ராவிட் தெரிவானார்.



# ருவெண்ரி–20 முதல்வன் கெய்ல்



(பெங்களூர்)

அதிரடியில் அசத்தும் கிறிஸ் கெய்ல் ருவெண்ரி-20 கிரிக்கெட் உலகில் முதல் நிலை வீரர். அவருக்கு இணையான வீரர் தற்போதைய நிலை் எவருமில்லை. அவர் எங்கள் அணியில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது என பெங்களூர் றோயல் சலஞ்சர் அணிக் கப்டன் ஹோலி தெரிவித்தார். கிறிஸ் கெய்லின் ஆட்டம் ரொம்ப பிரமாதமாக இருந்தது. உலகின் சிறந்த ருவெண்ரி-20 போட்டி வீரர் கெய்ல் தான். அதை அவர் மீண்டும் ஒரு முறை நிரூபித்து காட்டியிருக்கிறார். அது மட்டுமின்றி, அவர் தடாலடியாக துடுப்பைச் சுழற்றி விட்டு வெளியேறக்கூடியவர் அல்ல. ஆட்டத்தை பற்றி சிந்தித்து அதற்கு ஏற்ப ஆடக்கூடியவர் என்பதையும் இந்த ஆட்டத்தின் மூலம் வெளிப்படுத்தினார். இந்த தொடரில் எங்களுக்கு ஒரு ஆட்டம் தான் முடிந்துள்ளது. அதற்குள் கிறிஸ் கெய்லை மட்டுமே நாங்கள் நம்பி இருக்கிறோம் என்று சொல்ல முடியாது. அப்படி சொல்லப்பட்டாலும் அது பற்றி எங்களுக்கு கவலையில்லை. எங்கள் அணியைப் பொறுத்த வரை சகலதுறையில் ஜொலிக்கக் கூடிய வீரர்கள் இருப்பது மகிழ்ச்சி. புள்ளிப் பட்டியலில் இடம்பிடிப்பதே எமது முதல் இலக்கு எனவும் அவர் மேலும் தெரிவித்ததார்.

## இன்றைய ஆட்டம்

Season 6




புனே வாரியர்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: ராய் சஹாரா மைதானம்
மாலை 4.00 மணி

சன் ரைசர்ஸ் எதிர் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்
இடம் : ராஜீவ் காந்தி சர்வதேச மைதானம்
இரவு : 8.00 மணி

# ஊக்குவிக்க உதவி



(கொழும்பு)

மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்ட சங்கங்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக மக்கள் வங்கி அனுசரணையில் ஒரு இலட்ச ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் மக்கள் வங்கித் தலைவர் காமினி செனரத்தின் பங்குபற்றுதலோடு இந்த நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை விளையாட்டமைச்சில் நடைபெற்றது.

வலைப்பந்தாட்ட வீராங்கனைகளுக்கான வனிதவாசனா கணக்கும் ஆரம்பிக்கப்பட்டது. மகளிர் மத்தியில் இவ்விளையாட்டு பிரபல்யம் பெற்றுள்ளது. பாடசாலை, விளையாட்டுக் கழக மட்டத்தில் 5 இலட்சம் பேர் இவ் விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

4000இக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இந்த விளையாட்டு வியாபித்துள்ளது. வனித வாசனா 2013 வலைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் காலை ரொரிங்டன் விளையாட்டரங்கில் ஆரம்பமானது. மக்கள் வங்கித் தலைவர் காமினி செனரத், வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் லக்ஷ்மி விக்டோரியா, விளையாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்குபற்றினர்.

# முரளி என் ஹீரோ



(கொல்கத்தா)

முத்தையா முரளிதரன் உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர் என்பதில் ஐயமில்லை. அவரின் பந்து வீச்சுப் பாணி என்னை மிகவும் கவர்ந்தது. அவரை எனது ஹீரோவாகக் கருதுகிறேன் என கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி வீரர் சுனில் நரைன்தெரிவித்துள்ளார். எந்த மாதிரியான சூழ்நிலையாக இருந்தாலும் அதை பொருட்படுத்தாமல், ஒவ்வொரு பந்தையும் அதிரடியாக விளாசக்கூடிய உலகின் மிகவும் ஆபத்தான துடுப்பாட்ட வீரர். மற்ற கப்டன்கள் என்னை நல்ல விதமாக கையாண்டுள்ளனர். ஆனால் கொல்கத்தா கப்டன் கம்பீர் ஆட்டம் குறித்து நிறைய யோசனைகளை தந்து, என்னை உண்மையிலேயே சிறப்பாக வழிநடத்துகிறார். டெண்டுல்கருக்கு நான் பந்து வீசி இருக்கிறேன். வாய்ப்பு தந்தால், சுனில் கவாஸ்கருக்கும் பந்து வீச ஆசைப்படுகிறேன். என்னை பொறுத்தவரை முரளிதரன் தான் உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பங்களாதேஷ் அணி அறிவிப்பு

சிம்பாப்வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணியின் டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷ் குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

குழாம்: முஷபிக்கூர் ரஹீம், தமிம் இக்பால், ஜக்ருல் இஸ்லாம், மொஹமட் அஷ்ரபுல், ஷகிப் அல் ஹசன், மகமதுல்லா, மொமினுல் ஹக், நசீர் ஹொஸைன், சொஹக் கஷி, றூபெல் ஹொஸைன், ஷகாதத் ஹொஸைன், ஷகாரியார் நபீஸ் எனாமுல் ஹக், றொபியுல் இஸ்லாம், சஜிடுல் இஸ்லாம்.

## புதிய விதி அறிமுகம்



முறைகேடான பந்துவீச்சு (no ball) தொடர்பான புதிய சட்டம் ஒன்றை சர்வதேச கிரிக்கெட் சபை அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் பந்துவீச்சாளர்கள் பந்துவீச்சை மேற்கொள்வதற்கு முன்னதாக தமது முனையிலுள்ள விக்கெட்டை தகர்க்கும் பட்சத்தில் அதனை முறைகேடான பந்தாக அறிவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் சர்வதேச ஒருநாள், ருவெண்ரி-20 மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



கிரிக்கெட் வீரர் ராகுல் ராவிட்டிற்கு, இந்தியாவின் உயரிய விருதான பத்ம பூஷண் விருது நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் வழங்கப்பட்டதைக் காணலாம்

# காலிறுதியில் வென்றது செல்சி

(லண்டன்)

ரூபின் கஷான் அணிக்கு எதிரான ஐரோப்பிய லீக் கால்பந்து தொடரின் காலிறுதியில் செல்சி அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்தின் பல்வேறு பகுதியில் ஐரோப்பிய லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் காலிறுதியின் முதல் லீக் போட்டியில் செல்சி, ரூபின் கஷான் அணிகள் மோதின. இதில் போட்டியின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய செல்சி அணிக்கு, டாரஸ் (16ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய செல்சி அணிக்கு விக்டர் மோசஸ் (32ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரூபின் அணியின் நாட்சோ (41) பெனால்டி வாய்ப்பில் பதிலடி கொடுத்தார்.

பின் இரண்டாவது பாதியிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய செல்சி அணிக்கு டாரஸ் (70ஆவது நிமிடம்) மீண்டும் ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். ரூபின் அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. முடிவில், செல்சி அணி 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# மைக் ஹசியின் ஓய்வு சென்னைக்குப் பலம்

(சென்னை)

மைக் ஹஸி சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்று விட்டதால் அவர் ஐ.பி.எல். போட்டியில் எல்லா ஆட்டங்களிலும் ஆட முடியும். இது சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு பலமாகவே அமையும். இவ்வாறு சென்னை அணியின் பயிற்றுவிப்பாளர் பிளமிங் தெரிவித்துள்ளார்.

மைக்ஹஸி-முரளி ஜோடி நன்றாக ஓட்டங்களைக் குவித்திருக்கிறது. ருவெண்ரி-20 போட்டியில் ஏற்றம், இறக்கம் இருக்கும். ஆனால், அது எங்களை பொறுத்தமட்டில் நன்றாகவே அமைந்திருக்கிறது. மோர்கல் அணியில் இணையும் வரை உள்ளூர் வேகப்பந்து வீச்சாளருக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

உள்ளூர் வீரர்களுக்கு வாய்ப்பு அளிப்பதில் நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம். எங்கள் அணியில் 7 நல்ல இந்திய வீரர்கள் இடம் பிடித்து உள்ளனர். இதனால், எங்களது வெற்றி நம்பிக்கை மேலும் அதிகரித்து இருக்கிறது. தற்போதுள்ள அணித் தலைவர்களில் டோனியே சிறந்தவர். அவருடன் சேர்ந்து பணியாற்றுகின்றமை மகிழ்ச்சியான விடயம். கிண்ணம் வெல்லும் தகுதி எமது அணிக்கும் உண்டு. எனவே, அதை நோக்கியே இலக்கில எமது பயணம் தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரையிறுதியில் செரீனா

(சார்லஸ்டன்)

பேமிளி சர்கிள் கிண்ண ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு அமெரிக்காவின் செரீனா தகுதிபெற்றுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டன் நகரில், பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ., பேமிளி சர்கிள் கிண்ண ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் செரீனா, செக் குடியரசின் லூசியா சபரோவாவை சந்தித்தார். இதன் முதல் செட்டை 6-4 என கைப்பற்றிய செரீனா, இரண்டாவது செட்டையும் 6-1 என எளிதாக தன்வசப்படுத்தினார். முடிவில், அமெரிக்காவின் செரீனா 6-4, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.



# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அநேக பாலச்சந்திரன்கள்

- பி.ஜெயராம் -
(மூத்த பத்திரிகையாளரும், கோயம்புத்தூர் அமிர்தா ஊடகக் கற்கை பீடத்தின் தலைவரும்.)

1994ஆம் ஆண்டு - கொழும்பை தளமாகக் கொண்ட நான்கு இந்திய பத்திரிகையாளர்களும் மற்றும் ஒரு சர்வதேச செய்தி நிறுவனத்தை சேர்ந்த சிங்கள நிருபர் ஒருவரும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் ஒரு அபூர்வமான அனுமதியை பெற்றிருந்தோம். அது அபூர்வமானது எதனாலென்றால், அந்த நேரத்தில் வட குடாநாடு கிட்டத்தட்ட முற்றாக புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது, அவர்கள் அரசாங்கப் படைகளை மரபுவழி யுத்தங்கள் மூலம் அங்கிருந்து வெளியேற்றியிருந்தார்கள். பத்திரிகையாளர்கள், குடாநாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு, அரசாங்கம் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ ஆகிய இருபகுதியினரிடமிருந்தும் மற்றும் அந்தப் பிரதேசத்துக்குள் செல்வதற்கு, புலிகள் பாதை அனுமதி வழங்கியிருந்த ஒரேயொரு நிறுவனமான சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினரிடமும் அனுமதி பெறவேண்டியது அவசியம்.

ஒரு செப்டம்பர் மாத காலையில், த ஹிந்துவின் வி.ஜெயந்த், ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையின் அப்ராட்டிம் முகர்ஜி, பி.ரி.ஐ யின் விஜய் சதோக்கர், பிரான்சிய செய்தி நிறுவனமான ஏ.எப்.பி யை சேர்ந்த அமால் ஜயசிங்க, மற்றும் அப்போது யு.என்.ஐ யின் இலங்கை நிருபராக இருந்த இந்த எழுத்தாளர் ஆகியோர் கொழும்பிலிருந்து பலாலி விமானத் தளத்துக்கு இலங்கை விமானப்படையினாரால் நடத்தப்பட்டு வந்த வர்த்தக விமான சேவை மூலம் சென்றடைந்தோம்.

பலாலி இராணுவ முகாம், மற்றும் அந்த சுற்றாடலில் ஒருகாலத்தில் உள்ளூர் மக்களின் வீடுகளாக இருந்து இப்போது பாழடைந்து கிடக்கும் செங்கல் மற்றும் சுண்ணாம்பால் கட்டப்பட்ட கட்டடங்கள், என்பன அந்த தளத்தை கைப்பற்றுவதற்காக புலிகள் வருடக்கணக்காக தொடர்ச்சியாக மேற்கொண்ட ஆனால் சாத்தியமடையாமல் போன தாக்குதல்களின் வடுக்களை கொண்டிருந்தன. தளத்திலிருந்து நாங்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துக்கு சொந்தமான ஒரு கப்பல் எங்களை புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள, குடாநாட்டின் உச்சியில் அமைந்துள்ள பருத்தித்துறை துறைமுகத்துக்கு கொண்டு சென்றது.

ஆயுதம் தாங்கிய புலி அங்கத்தவர்கள் எங்கள் குழுவினரை பொறுப்பேற்றுக் கொண்டனர். அரசாங்கத்தின் பொருளாதார தடைகள் காரணமாக, அந்தப் பிரதேசத்தில் மின்சாரம் இல்லை, பெற்றோல், டீசல் எதுவும் இல்லை. அப்படியான ஒரு சூழலில் தாங்கள் எப்படி வெற்றிகரமாக தாக்குப்பிடித்து நிற்கிறோம் என்பதை எங்களுக்கு விளக்குவதற்காக அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஒரு இரண்டு நாள் சுற்றுப் பயணத்தை நாங்கள் நடத்தினோம்.

அந்த சுற்றுலா யாழ்ப்பாண மனிதர்களின் புதுப்புனைவுத் திறமையின் உண்மை நிலையை அறிவிப்பதாக இருந்தது - தேங்காய் எண்ணெயில் இயங்கும் முச்சக்கர வண்டிகள், சுறுசுறுப்பு மிக்க சாரதிகள் தங்கள் சட்டைப் பைகளில் தயாரக வைத்திருக்கும் பெற்றோல் நிரம்பிய கைக்கடக்கமான துளி சொட்டியிலிருந்து இரண்டு மூன்று சொட்டு பெற்றோலை விட்டு இயந்திரத்தை ஆரம்பித்த பின்னர் அதை தேங்காயெண்ணைக்கு மாற்றுவதன் மூலம் இது நடைபெறுகிறது, சில துளி மண்ணெண்ணை மற்றும் கடதாசி திரி, என்பன மூலம் விசேடமாக வடிவமைக்கப்பட்ட களிமண் விளக்குகள் மூலம் சிறுவர்களுக்கு ஒளியை வழங்குவது போன்ற அநேக புதுப்புனைவுகளை அவர்கள் செய்திருந்தார்கள்.

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள நீதிமன்றத்தில், இன்னமும் தனது பதின்ம வயதுகளில் உள்ளவரைப் போல தோற்றமுள்ள ஒரு பெண் எல்.ரீ.ரீ.ஈ. அங்கத்தவர் நீதிபதியாக அமர்ந்திருந்தார், அவரது முன்னால் அனுபவம் மிக்க வழக்கறிஞர்கள் தங்களது கறுப்பு அங்கியை அணிந்தவாறு சில வழக்குகளை விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு சிறுவ ன் கேளிக்கை பூங்காவில் இருந்த ஏற்ற இறக்க விளையாட்டு சாதனத்தின் கைபிடியில் ஏகே 47இன் பிரதிமை வடிவமைக்கப் பட்டிருந்தது, அதேவேளை பரிசுத்தமாக வைக்கப் பட்டிருந்த புலிகளின் சவச்சாலையில் போரில் கொல்லப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் கல்லறைகள் வரிசையாக நீண்டிருந்தன. ஆனால் இலங்கை இராணுவத்தால் துடிக்க துடிக்க கொல்லப்பட்டதாக தோன்றும், எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரனின் 12 வயது நிரம்பிய பாலகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டு கிடக்கும் கசப்பான துயரம் நிரம்பிய படங்களை பார்த்தபோது, அந்த சுற்றுலாவைப் பற்றிய ஒரு அழிவில்லாத நினைவாக, சமீபத்தில் என் நினைவில் ஒரு விடயம் பொறிகிளப்பியது.



நல்லூர் கந்தசாமி கோவில் மைதானத்தில் புலிகள் ஏற்பாடு செய்திருந்த ஒரு கண்காட்சியை காண நாங்கள் சென்றிருந்தோம், அங்கு பாலச்சந்திரனைவிட இளமையான தோற்றத்தில் உள்ள 15 - 20 சிறுவர்கள் குழுவினரை காண நேர்ந்தது, அவர்கள் இராணுவ உடைகளுடன் தலையில் தொப்பி அணிந்து ஒற்றை வரிசையில் அமைதியாக நடந்து கொண்டிருந்தார்கள். எங்கள் ஆச்சரியம் கலந்த பார்வையை கண்ட வழிகாட்டி, அவர்கள் எல்.ரீ.ரீ.ஈ இராணுவ பயிற்சி நிலையத்தை சேர்ந்த பயிற்சிப் படையினர் என விளக்கமளித்தார்.

அப்படியான நூற்றுக்கணக்கான சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலைகளிலிருந்து பலவந்தமாக கடத்தி வரப்பட்டு, பிரபாகரன் மற்றும் அவரது தளபதிகளினது வெறித்தனமான குறிக்கோள் மிக்க கனவுகளை நிறைவேற்றுவதற்காக பீரங்கித் தீவனம் போல பலியாக்கப்பட்டவர்கள். உண்மையில் எங்களில் சிலர் நாங்கள் தங்கியிருந்த சுபாஷ் தங்குவிடுதியிலிருந்து மெல்ல நழுவி வந்தபோது, சிறுவர் ஆட்சேர்ப்பு புலிகளினால் மிகவும் மூர்க்கத்தனமாக நடைபெறுவதால், இந்த குழந்தை அபகரிப்பை தடுப்பதற்காக அவர்களின் தாய் தந்தையர் பாடசாலை வாயிலுக்கு வெளியில் நின்று காவல்காத்து வருகிறார்கள் என்று நீண்டகாலமாக அங்கு தொடர்புள்ளவர்களால் எங்களுக்குச் சொல்லப்பட்டது.

இலங்கைப் படைகளால் பிரபாகரனின் இளைய மகன் கொல்லப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு பெரும் பயங்கரத்தை கிளப்பியுள்ளது, ஆனால் எல்.ரீ.ரீ.ஈ யின் பீரங்கித் தீவனமாக மாறி தங்கள் இன்னுயிர்களை பலிகொடுத்த சிறுவர்களையும் மறந்துவிடக் கூடாது.

எனவே விடுக்கப்படும் இந்த வேண்டுகோள், பாலச்சந்திரனுக்காக மட்டும் இல்லாமல், இலங்கை மோதலில் ஏற்பட்ட போரில் தங்கள் உயிர்களை நீத்த பெயர் தெரியாத அந்த சிறுவர்களுக்காகவும் இருக்கவேண்டும்.

## கிரிக்கெட்!

இங்கிலாந்தில் தோன்றிய விளையாட்டு கிரிக்கெட் என்பது எல்லாருக்கும் தெரிந்தது தான்... இந்த ஆட்டத்தை உலகெங்கும் பரப்பியவர்கள் இங்கிலாந்தின் மாலுமிகள், போர் வீரர்கள், பாதிரியார்கள் தான்.

கிரிக்கெட் விளையாட்டு விதிகளை வகுக்க ஏற்பட்ட நிறுவனம் இங்கிலாந்தில் உள்ள மெல்போர்ன் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி.) இந்த நிறுவனம், 1787இல் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த ஆண்டே இந்த நிறுவனத்தினர், தங்களுடைய முதல் ஆட்டத்தை, "லோர்ட்ஸ்" என்ற புகழ் வாய்ந்த மைதானத்தில் ஆடினர். அந்த வருடம் மே மாதம் 30ஆம் திகதி கிரிக்கெட் விதிகளை முதன் முறையாக எம்.சி.சி. நிறுவனம் சீர்படுத்தியது. கிரிக்கெட் விதிகள் அநேக மாற்றங்களுக்குப் பிறகு, 1947இல் இறுதியாக சரிப்படுத்தப்பட்டது. அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களை ஆராய்ந்து முடிவைக்காண, கிரிக்கெட் ஆடும் நாடுகளை உறுப்பினராகக் கொண்ட, "இன்ரநஷனல் கிரிக்கெட் கொன்பரன்ஸ்!" என்ற கமிட்டியும் இப்போது உள்ளது...



## நீரிழிவு நோயாளிகளுக்கு....

அதிக தண்ணீர் குடிக்க வேண்டும். உடலில் சேர்ந்துள்ள நச்சுக்கள் அதன் மூலம் வெளியேறும்.
ஒவ்வொரு நாளும் குறைந்தது 1 மணி நேரம் எளிய உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.
உடற்பயிற்சி மேற்கொண்ட உடன் தண்ணீர் அருந்தாதீர்கள்.
நீங்கள் இன்சுலின் எடுத்துக் கொள்பவரானால், போதிய இடைவெளியில் மூன்று நேரமும் சரியாகச் சாப்பிட வேண்டும்.
வேகமாகச் சாப்பிடாமல், மெதுவாகச் சாப்பாட்டை மென்று விழுங்குங்கள்.
தினமும் 20 முதல் 25 கிராம் பச்சை வெங்காயம் சாப்பிடுங்கள்.



சீடன் ஒருவன் கன்பூசியசைப் பார்த்து, "ஐயா தாங்கள் எப்படிப்பட்டவர் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டான். "சிறிதும் சோர்வின்றி உண்மையைக் கண்டறிய உழைப்பவன். அறிந்தவற்றை பிறருக்கு எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பவன். செயலில் ஈடுபட்டிருக்கும்போது உணவை மறந்திடுபவன். மகிழ்ச்சியில் இருக்கும்போது கவலையை மறந்திருப்பவன். முதுமைப்பருவம் அடைந்ததும் அதை உணராமல் இருப்பவனே கன்பூசியஸ் என்று அறிந்து கொள்" என்று விளக்கம் அளித்தார்.

## நான் யார்?

கர்ணபரம்பரைக் கதைகள் என்கிறோம். கர்ணகடூரமாக இருக்கிறது என்கிறோம். இந்த "கர்ண" என்பதன் அர்த்தம் என்ன தெரியுமா? "கர்ணன்" என்ற பெயரின் அர்த்தமும் இதுதான். கர்ணம் என்றால் காது என்று பொருள். எழுதப்படாமல் ஒருவர் சொல்லி ஒருவர் என்று செவி வழியாக வந்த கதைகள்தான் கர்ண பரம்பரைக் கதைகள். கேட்பதற்கு கொடூரமாக இருப்பதுதான் "கர்ணகடூரம்". காதுகளில் குண்டலத்தோடு பிறந்தவன் என்பதால் "கர்ணன்" என்ற பெயர் வந்தது.



## கர்ண கொடூரம்

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

இந்த மூன்று படவரிசையில் உள்ள எல்லா அற்புதமான தருணங்களையும், கதாபாத்திர வடிவமைப்புகளையும், காட்சிப்படுத்தலின் சிறப்புகளையும் சொல்வதானால் ஒரு தனித் தொடரே எழுத வேண்டும். முதல் பாகமான "பெல்லோஷிப் ஒப் த ரிங்"இல் பிரம்மாண்டமான ஒரு பயண மொண்டாஜ்-உம், காட்டாற்று வெள்ளம் திடீரென்று பெருகி நீர்க்குதிரைகளாக ஓடிவரும் காட்சியும், குகைக்குள் சரிந்து விழும் மதில் சுவர்களின் மேல் ஓடி நெருப்புப் பூதத்திடமிருந்து தப்பிக்கும் காட்சியும் மறக்க முடியாதவை.



இரண்டாம் பாகமான "டு டவர்ஸ்" மற்ற இரு பாகங்களைப் போல ஒஸ்கார் விருது விழாவில் கெளரவிக்கப்படவில்லை. ஆனால் மூன்றில் ஆகச் சிறந்தது அதுவே என்று கருதும் இரசிகர்கள் நிறைய இருக்கிறார்கள். குறிப்பாக "கொலும்" எனும் மனப்பிறள்வுள்ள சிக்கலான கதாபாத்திரம் அனிமேஷனில் வடிவமைக்கப்பட்ட விதம், அந்தத் தளத்தில் முதன்மையானவரான ஜோர்ஜ் லூக்காஸ்-ஐயும் மிஞ்சுவதாக இருக்கிறது. தீயசக்தியின் பிடியில் ஒரு அரசன் வீழ்ந்து சுயமிழந்து கிடப்பதும் பிறகு அவன் மீட்கப்படுவதுமான பகுதிகள் மறக்க முடியாதவை.

நிறைவுப் பாகமான "ரிடேர்ன் ஒப் த கிங்" உலக இரசிகர்களின் எதிர்பார்ப்பையும் நிறைவு செய்தது. 11 ஒஸ்கார் விருதுகளை "பென் ஹர்", "டைட்டானிக்" படங்களுக்குப் பிறகு பெற்றது இந்தப் படம்தான். சிறந்த படம், சிறந்த திரைக்கதை, சிறந்த இயக்கம் எனும் உச்ச விருதுகளும் அந்தப் பதினொன்றில் அடக்கம். இது அந்த மூன்றாம் பாகத்துக்கு மட்டுமல்லாமல் மொத்த தொடரையே கௌரவிப்பதற்காகக் கொடுத்தது என்றே நான் நினைக்கிறேன். படத்தில் வரும், ஒரு மலையே நகரமாக அமைந்த வடிவமைப்பும், அதன் அரசன் புத்திர சோகத்தால் மதியிழந்து தனது படையினர் களத்தில் மாண்டுகொண்டிருக்க பாட்டு கேட்டபடி வாயில் உணவைக் கடித்துத் தின்பது இடைவெட்டாகக் காட்டப்படுவதும், மாபெரும் இறுதி யுத்தமும், மோதிரம் அழிக்கப்படும் உச்சக் காட்சியும் என்றென்றைக்கும் நினைவில் நிற்கக் கூடியவை.

பீட்டர் ஜாக்ஸன் சிறுவயதில் பார்த்த ஒரு படம்தான் அவருக்கு திரைக்கலையில் ஆர்வம் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அது 1933ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட "கிங் கொங்". அதன் பாதிப்பு அனேகமாக அவரின் எல்லாப் படைப்புகளிலும் உண்டு. சிறு வயதில் ஏராளமான ராட்ஸச ஜந்துக்களைத் தானே உருவாக்கிக் குறும்படங்களை எடுத்திருக்கிறார். மினியேச்சர் வடிவமைப்பதிலிருந்து, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு வரை எல்லாவற்றையும் தானே செய்து, தானே பல வேடங்களில் நடித்து, தன் நண்பர்களையும் நடிக்கவைத்து, ஒரு விளையாட்டுப்போல அவர் உருவாக்கிய படங்களின் மூலமே அவர் திரைப்பட தொழில்நுணுக்கங்களைப் பயின்றார்.

70களில் மீண்டும் "கிங் கொங்" எடுக்கப்பட்டு வெளியானபோது, பீட்டர் ஜாக்ஸன் பெரும் எதிர்பார்ப்போடு சென்று பார்த்தார். ஆனால் அதில் மூலத்திலிருந்து நிறைய மாற்றங்கள் செய்யப் பட்டிருந்தன. முப்பதுகளில் நடந்த பொருளாதார வீழ்ச்சி, சினிமா என்னும் புதிய கலைத்துறை, அறியப்படாத நிலவெளிகள் தீவுகள் பற்றிய மர்மம் ஆகியவையே மூலப் படத்தின் பின்னணிக் களம். ஆனால் அவையெல்லாம் முற்றிலுமாக அகற்றப்பட்டு, 70களில் நடப்பதுபோலவே அந்த இரண்டாம் படம் அமைந்திருந்தது. அதனால் சமகாலத்தின் நம்பகத்தன்மைக்காக டைனோஸர் உட்பட மற்ற பெரிய விலங்குகள் வரும் பகுதிகள் நீக்கப்பட்டு, மர்மத் தீவின் காட்டில் கிங் கொங் மட்டுமே பெரிதாக இருப்பதுபோல் காட்டியிருந்தார்கள்.

அந்தப் படம் பீட்டர் ஜாக்ஸனுக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை அளித்தது. தனக்கு வாய்ப்புக் கிடைத்தால் மூலப்படத்துக்கு மிக நெருக்கமாக மீண்டும் ஒரு "கிங் கொங்" படத்தை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எடுக்க வேண்டும் என்று அப்போதே விரும்பினார். அதற்கான வாய்ப்பை உருவாக்கிக்கொண்டு அவர் எடுத்த "கிங் கொங்" 2005இல் வெளிவந்தது.

இந்தப் படத்தின் சிறப்பான அம்சமே, அனிமேஷன் பாத்திரமான கிங் கொங், ஒரு தேர்ந்த நடிகனுக்குரிய முகபாவனைகளோடும் உடல்மொழியோடும் வலம்வந்ததுதான். "லோர்ட் ஒப் த ரிங்ஸ்" படத்தின் "கொலும்" அனிமேஷன் கதாபாத்திரத்தை அன்டி செர்கிஸ் என்ற நடிகரே செய்தார். அவரின் உடல் மற்றும் முக அசைவுகள் "மோஷன் கப்சரிங்" முறையில் பிரதி எடுக்கப்பட்டு அனிமேஷன் பாத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டன. நோஞ்சானான அந்தப் பாத்திரத்தில் நடித்த அதே நடிகர்தான் ராட்சஸ உருவம்கொண்ட கிங் கொங் பாத்திரத்திற்கான மோஷன் கப்சரிங்-குக்கும் நடித்திருக்கிறார். கொரில்லாக் குரங்கின் உடல்மொழியை நம்பகத்தன்மையோடும் அதே சமயம் கதைக்குத் தேவையான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையிலும் அற்புதமாக செய்திருக்கிறார் அவர். இந்த வகையான தொழில்நுட்ப உத்தியின் முன்னேறிய வடிவமே "அவதார்" படத்திலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.



1933இல் வந்த மூலப் படம் குறியீட்டுத்தளத்தில் அப்போதைய அமெரிக்க அரசியலையும், ஜனாதிபதி ஃபிரான்க்ளின் ரூஸ்வெல்ட்-ஐயும் விமர்சிப்பதாக கருதப்படுகிறது. ஆனால் பீட்டர் ஜாக்ஸனின் இந்தப் படத்தில் அப்படி சமகாலத்துக்கான எந்த ஒரு குறியீட்டு அர்த்தமும் வழங்கப் படவில்லை. முழுக்க முழுக்க ஒரு பொழுதுபோக்குப் படமாகவே அது இருக்கிறது. நான் சோர்வாக இருக்கும் போதோ, அல்லது யதார்த்தத்திலிருந்து கொஞ்ச நேரம் தப்பிக்க நினைத்தாலோ, பார்க்க விரும்பும் சில படங்களில் இதுவும் ஒன்று.

(பட்டியல் தொடரும்)

## கிசுமுசுப் பழம்!



உலர்ந்த திராட்சைப்பழத்தைத்தான் கிசுமுசுப்பழம் என்றும் கூறுகின்றனர். இந்தப் பழவகையிலும் ஒரு சிலவற்றில் விதையும் சிலவற்றில் விதை இல்லாததும் உண்டு.


ஓர் உலர்ந்த திராட்சைப் பழம் 30 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்து கொண்டது. இதை குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் அவர்கள் நல்ல உடல் பலத்துடன் வேகமாக வளர்ந்து வருவார்கள். எலும்புகளோடு பற்களும் உறுதியாக அமையும். ஆகையால் வளரும் குழந்தைகளுக்கு இரவு உணவுக்குப் பின் தினமும் 15 முதல் 20 வரை திராட்சைப் பழத்தைக் கொடுத்து வருவது நல்லது.

வாலிப வயது தாண்டி வயோதிப வயதிற்கு வரும்பொழுது தினமும் உலர்ந்த திராட்சைப் பழத்தை இரவு உணவுக்குப் பின் சாப்பிட்டு வந்தால் சுறுசுறுப்பு ஏற்படும்; எலும்புகள் உறுதியாக இருக்கும். பற்கள் கெட்டிப்படும்; பல் சம்பந்தமான எந்தக் கோளாறும் ஏற்படாது. இதயம் பலத்துடனிருக்கும். இதயத்துடிப்பு இயற்கை அளவிலேயே இருக்கும்.

குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் பெண்கள் இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகு கைப்பிடியளவு உலர்ந்த திராட்சைப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் சத்தான பால் உற்பத்தியாகும். வளரும் குழந்தைகளின் எலும்புகள் பலப்பட்டு கால்கள் வளையாது வளரும். மண்டையோடு பலப்படும்.

**('பழங்களின் மருத்துவப் பயன்கள்' என்ற நூலிலிருந்து.)**

## முதல் பூணூல்!



ஒருநாள் பகல், 2 மணிக்கு வ.ரா. அவர்கள் வழக்கம் போல் வரும் ரிக்ஷா வண்டி வந்தது. ரிக்ஷா வண்டிக்காரர் சொன்ன விஷயம் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.


"பெரிய ஐயா இறந்து போயிட்டாருங்க..." என்று கண்ணீர்ப் பெருக்கோடு சொல்லி, "அம்மா, உங்களைக் கையோடு அழைத்துவரச் சொன்னாங்க" என்று தெரிவித்தார்.

நான் உடனே புறப்பட்டு, காரில் வ.ரா. அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்த என்.எஸ்.கே.யும், மதுரம் அம்மையாரும் இந்தச் செய்தி கேட்டவுடன் வ.ரா. அவர்கள் வீட்டுக்கு வந்தார்கள். இதற்குள் வ.ரா. அவர்களின் எழுத்தாள அன்பர்கள் மற்றும் அரசியல்துறை நண்பர்கள் அனைவருக்கும் நேரிடையாகவும், தொலைபேசி மூலமும் செய்தி அனுப்பினோம். மாலைக்குள் ஏராளமான எழுத்தாளர்களும் உற்றார் உறவினர்களும் வந்து கூடிவிட்டார்கள்.

வ.ரா. அவர்களின் தம்பி திருவேங்கடம் பள்ளிக்கூட ஆசிரியராகப் பணியாற்றி வருபவர் எல்லாரிடமும் வந்து தெரிவித்தார். "இதுவரை வ.ரா. என் தமையனார் அவர்கள் சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு குல ஆசாரத்தையெல்லாம் விட்டு ஒதுங்கியே வாழ்ந்து இன்று மறைந்துவிட்டார். அவர்களின் இறுதிச் சடங்கையாவது குலவழக்கப்படி மரியாதை செய்து எரியூட்டுவதற்கு எங்களை அனுமதியுங்கள்" என்று கூற, யாரும் குறுக்கிடாமல் சடங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. பூணூல் அணியாதிருந்த அவரது உடலில் முதல் முதலில் பூணூல் அணிவிக்கப்பட்டது.

**('திரும்பிப் பார்க்கிறேன்' நூலில் எஸ்.வி. சஹஸ்ரநாமம்)**

# பசி உணர்வை கட்டுப்படுத்தக்கூடிய மைக்ரோசிப் கண்டுபிடிப்பு



உடல் இளைக்க உதவும் விதமான உடலில் பொருத்தவல்ல மைக்ரோசிப் மின்னணுக் கணனிச் சில்லு ஒன்றை தாங்கள் உருவாக்கியுள்ளதாக சில லண்டன் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தச் சில்லுகள் உடலில் பொருத்தப்பட்டவருக்கு அதிகம் பசிக்காது என்பதால் அறுவை சிகிச்சை செய்து உடல் எடையைக் குறைப்பது போன்றவற்றுக்கு மாற்றாக இந்த முறை அமையும் என்று தெரிவிக்கின்றனர். மூளைக்கு பசியை உணர்த்துவதிலும் உடலின் வேறு பல வேலைகளைக் கட்டுப்படுத்துவதிலும் உதவுகின்ற வேகஸ் நேர்வ்ஸ் எனப்படும் நரம்பிலே சேர்ந்து இருப்பதுபோல இந்தச் சில்லு உடலில் பொருத்தப்படும். விலங்குகளிடத்தில் இந்தக் கண்டுபிடிப்பைப் பயன்படுத்திப் பார்க்கும் பரிசோதனைகள் ஆரம்பிக்கவுள்ளன.

வேகஸ் நரம்புகளில் பொருத்தப்பட்ட இந்தச் சில்லுகள் பசி தொடர்பான இரசாயன அறிகுறிகளை புரிந்துகொள்ளும் என்றும், அதிகமான பசியை உணர்த்தாத வகையில் மூளைக்கு மின்னணு சமிக்ஞைகளை அனுப்பும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அளவாகவும் மெதுவாகவும் சாப்பிடவைப்பது போல இந்தச் சில்லுகள் மூலம் மூளைக்கு சமிக்ஞைகளை அனுப்ப முடியும். காக்காய் வலிப்பைக் கட்டுப்படுத்துவதில் உதவக்கூடிய வகையில் வேகஸ் நரம்புகளில் பொருத்தப்படும் மைக்ரோசிப் சில்லுகளை இதே லண்டன் இம்பீரியல் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் ஏற்கனவே உருவாக்கியிருந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

# இயந்திரத் தும்பியை உருவாக்கி சாதித்தது ஜேர்மன் நிறுவனம்



ஜேர்மனியைச் சேர்ந்த நிறுவனமொன்று இயந்திர தும்பியொன்றை(obotic dragon-fly) உருவாக்கியுள்ளது. இதற்கு "பயோனிக்ஹொப்டர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் நிறை 175 கிராம். இதன் சிறகொன்று 63 சென்ரி மீற்றர் நீளமானதுடன் உடல் 44 சென்ரி மீற்றர் நீளமானது. சாதாரண தும்பியைப் போல இவ் இயந்திரத் தும்பியும் எத்திசையிலும் பறக்கக் கூடியது. மேலும், இதனை ஸ்மார்ட் போனினால் கட்டுப்படுத்தவும் முடியும். இயற்கைக்கு சவால் விடும் வகையில் அமைந்துள்ள இது பார்ப்பவர்களை பரவசத்துக் குள்ளாக்குகின்றது.




# பேஸ்புக் தளத்திலுள்ள உங்கள் கணக்கினை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான சில வழிமுறைகள்




சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபலமாகத் திகழும் பேஸ்புக் பல சிறப்பம்சங்களை தினமும் அறிமுகப்படுத்தியவாறே உள்ளது. உங்களுடைய ∴பேஸ்புக் கணக்கை ஹேக்கிலிருந்து பாதுகாக்கவும் இந்நிறுவனம் பல வழிகளிலும் முயன்று வருகிறது. நீங்களும் ∴பேஸ்புக் வழங்கும் பாதுகாப்பு உத்திகளை கடைப்பிடித்தால் உங்களுடைய கணக்கினையும் பத்திரம்போல் பாதுகாப்பாக்கலாம்.

*கடவுச்சொல் :*

பாஸ்வேர்ட் என அழைக்கப்படும் இதை வலுவாக அமைக்கவேண்டும் என்பதே ∴பேஸ்புக்கின் முதன்மையான வேண்டுகோள். இந்தக் கடவுச்சொல்லை வலுவானதாக்க குறைந்தது 6 எழுத்துக்கள் கொண்டதாகவாவது இருத்தல் சிறப்பு. அதில் !@#$%^ இம்மாதிரி குறியீடுகளையும் சேர்ப்பது பாதுகாப்பிற்கு முக்கிய வழிவகுக்கும்.

*இ-மெயில்:*

∴பேஸ்புக் கணக்கிற்காக நீங்கள் பயன்படுத்தும் இ-மெயில்முகவரியை பாதுகாப்பாகவும், சீராகப் பயன்படுத்தியும் வருதல் நன்மை தரும். ஏனெனில் உங்களுடைய ∴பேஸ்புக் கணக்கின் கடவுச்சொல் தொலைந்துவிட்டால் ரெக்கவரி செய்வதற்கு இ-மெயில் முகவரியே முக்கியம்!

*லொக்அவுட்:*

∴பேஸ்புக் பயன்படுத்தி முடித்தவுடன் அதை கண்டிப்பாக லொக்அவுட் செய்யவேண்டும் என்பது ∴பேஸ்புக் நிறுவனத்தின் முக்கியமான வேண்டுகோள். ஏனெனில் நீங்கள் உங்களுடைய ∴பேஸ்புக் கணக்கை லொக் அவுட் செய்யவில்லை என்றால், சில மாதங்கள் கூட அது அப்படியே இருக்கவும் வாய்ப்புகள் அதிகம். வேறு யாராவது கூட அதை பயன்படுத்த முடியும் என்பதை மனதில் வைக்கவும்.

*வைரஸ் தடுப்பான் :*

நீங்கள் பயன்படுத்தும் கணனி மற்றும் லப்டொப்களில் வைரஸ் தடுப்பான்களை [Antivirus] அவசியம் பயன்படுத்தவேண்டும்.

*பாதுகாப்பான முறை:*

∴பேஸ்புக் பயன்படுத்துகையில் ஆங்காங்கே காணப்படும் கேடுகெட்ட சில லிங்க்குகளை கிளிக்செய்கையில் கவனம் தேவை. பெரும்பாலும் ஆபாச படங்களாகவே ஸ்பேம் வைரஸ்கள் பரவி உங்களுடைய ∴பேஸ்புக் கணக்கை முடக்கவும் வாய்ப்புகள் அதிகம்.

*உங்கள் உலாவி:*

கணனிகளில் பயனடுத்தும் ப்ரௌசெர் என்ற உலவிகளை அவ்வப்பொழுது அப்டேட் செய்வதும் சாலச்சிறந்தது.



# 50 சதவீதமான செல்பேசிகள் பாதுகாப்பு இல்லாதவை ஆய்வில் அதிர்ச்சித்தகவல்

பயன்படுத்தப்படும் மொபைல் போன்களில், 50 சதவீதம் போன்கள், எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமலேயே செயற்படுவதாக, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மொபைல் போன்களின் தகவல்கள் திருடப்படுவதோடு, நிதி சார்ந்த மோசடிகளும் நடக்கிறதாம்.

மொபைல் பயன்படுத்தும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், இணைய இணைப்பிற்கும் மொபைல் போன்களையே பயன்படுத்துகின்றனர். பாதுகாப்பற்ற நிலையில், இந்த மொபைல் போன்களுக்கு, இணையம் வழியாக ஆபத்து வந்து சேர்கிறது. பணம் திருடும் வேலைகளுக்கான தகவல்கள் மிக எளிதாகக் கைப்பற்றப்படுகின்றன என்று நோர்ட்டன் அன்டி வைரஸ் தொகுப்புகளைத் தயாரித்து வரும் செமான்டெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.






ஆறு வருட கடின உழைப்பின் பின்னர் உங்களது G-Mail ஐ முழுவதுமாக நீல நிறத்திற்கு மாற்றியுள்ளார்கள். நீலம் வானத்தின் நிறம், கடலின் நிறம், இயற்கையின் நிறம் என்பதால் இந்த முயற்சியாம். இனிமேல் இந்தப் புதிய G mail Blue நம்ப முடியாத சக்தியுடன், மிக வேகமாக இயங்கும் தொழில்நுட்பத்தில் உங்களை சந்திக்கப் போகிறதாம்.

# Google Nose - இணையத்தளத்தில் தேடும் சொற்களின் மணத்தையும் நுகரலாம்!

கூகுள் அறிமுகப்படுத்தியுள்ள இரண்டு புத்தம் புதிய சேவைகள்.

1. Google Nose : இதுவரை நீங்கள் கூகுள் தேடுபொறியில் தேடும் எந்தவொரு சொற்களுக்கும் உரிய படங்களைப் பார்க்கலாம், சிலவேளைகளில் அதன் ஒலியைக் கேட்கலாம். ஆனால், அதன் மணத்தை உங்களால் நுகரமுடியாது. கூகுள் தற்போது அறிமுகப்படுத்தியுள்ள Google Nose எனும் புதிய தொழில்நுட்பம் மூலம், நீங்கள் கூகுள் தேடுபொறியில் தேடும் சொல்லின் மணத்தை நுகர முடியும். Smell எனும் பட்டனை அழுத்தி, உங்கள் கணனித்திரையின் அருகில் மூக்கை கொண்டு சென்று Enter ஐ தட்டும் போது அதன் வாசம் வெளிப்படுகிறது. புதிய கார் ஒன்றின் வாசம் என்ன? பேய்க்கு வாசம் இருக்கிறதா? அப்படியாயின் அதன் வாசம் என்ன? எகிப்தில் உள்ள சிலைகளின் வாசம் என்ன என உங்களது எந்தக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கிறது Google Nose. தற்சமயம் இது Beta Version ஆக இருப்பதால் முறையாக மணத்தை நுகர முடியாது போகலாம்.

எனினும் முயற்சித்துப் பாருங்களேன்.



# கோட்டக்கல்விப்பணிப்பாளரின் அட்டகாசம்:

# இலங்கை தமிழர்ஆசிரியர் சங்கத்தில் முறைபீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு உட்பட ஒரு கோட்டத்திற்குப் பொறுப்பான கோட்டக்கல்விப் பணிப்பாளர் பாடசாலை ஒன்றின் வளாகத்தினுள் முன் அறிவித்தலில்லாமல் நுழைந்து மாணவர்களைத்தாக்கி, ஆசிரியர்களைத்தகாத வார்த்தைகளால் புண்படுத்தி அட்டகாசம் புரிந்துள்ளார். இது தொடர்பில் இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கத்திற்கு பலதூரப்பட்டவர்களும் எழுத்து மூலமான முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் குறிப்பிட்ட கோட்டக் கல்விப்பணிப்பாளர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சு செயலாளரைக் கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இந்தக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் தான் பல்கலைக் கழகத்தில் பெற்றுக கொண்ட பட்டத்திற்காக தன்னை எல்லோரும் வாழ்த்தி பத்திரிகைகளில் வாழ்த்துப் போடவேண்டுமென்று கட்டாயப்படுத்தி தனது புகைப்படத்தினையும் வழங்கி வற்புறுத்தியமை தொடர்பாக ஆளுநரிடம் முறையிட்டுள்ளோம். அதற்கான பதில் அளுநரிடம் இருந்து கிடைப்பதற்கிடையில் மீண்டுமொரு அட்டகாசத்தினை நடாத்தியுள்ளார். இவர் தொடர்பான பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்த வண்ணமுள்ளன.

முறைப்பாடுகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள், பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், 131 கண்டி வீதி, யாழ்ப்பாணம், அல்லது Tamilteachers@yahoo.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# தெல்லிப்பளை கொலை வழக்கு சந்தேகநபர்கள் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பொலிஸ் பிரிவில் ஒருவரைத் தடியால் தாக்கிக் காயப்படுத்தியதுடன் அவர் வைத்தியசாலையில் மரணமடைந்தது தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கடந்தவாரம் தெல்லிப்பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தகவல் தருகையில் கடந்த 26.02.2012 அன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இறந்ததாகவும் இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸ்நிலையத்தில் மாசி மாதம் 28ஆம் திகதி முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டதனை அடுத்து இந்த மூவரும் தெல்லிப்பளைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

குறித்த நபரின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கையில் தடியினால் தலையில் தாக்கிப்படு காயப்படுத்தியதினாலேயே இந்த மரணம் சம்பவித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

# அச்சுவேலி ஊடான "பஸ்" சேவை மீண்டும் ஆரம்பம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தொண்டைமானாறு அச்சுவேலி ஊடான யாழ்ப்பாணம் பருத்தித்துறை பாதை இல 752) 'பஸ்' சேவையை இலங்கைப் போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ கடந்த 1ஆம் திகதிமுதல் ஆரம்பித்துள்ளது.

நாட்டில் நிலவிய யுத்த அனர்த்தங்களால் உயர்பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டு இப்பாதை மூடப்பட்டமையால் இந்த பருத்தித்துறை- யாழ்ப்பாணம் 'பஸ்' சேவை நிறுத்தப்பட்டது. பின்னர் இச்சேவை நடைபெறவில்லை.

இச்சேவையால் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், அரசஉத்தியோகத்தர்கள் உட்படப் பிரயாணிகள் பலரும் நன்மையடைவார்கள் என்றும் எனவே,இந்த பஸ்சேவையை நடத்த நடவடிக்கை எடுக்குமாறும் வல்வெட்டித்துறை நகரசபைத்த விசாளர் என். அனந்தராஜ் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்றபோது கோரிக்கை விடுத்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் அலன்ரின் இந்த 'பஸ்'சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைப்போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ முகாமையாளரைப்பணித்திருந்தார்.

இதனையடுத்து இச்சேவை கடந்த 1ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம், இருசேவைகள் நடைபெற்று வருகின்றன.

பருத்தித்துறையிலிருந்து காலை 9.00 மணிக்கும், பிற்பகல் 2.00 மணிக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து முற்பகல் 11.45 மணிக்கும் , பிற்பகல் 4.30 மணிக்கும் இச்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுவருவதாக இலங்கைப் போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் [illegible]கந்தசாமி அறிவித்துள்ளார். ([illegible], 01)

# வலிகாமம் கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய தமிழ்மொழித்தினப் போட்டி - 2013 எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன இப்போட்டிகளில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றோர்.

**ஆக்கம் எழுத்து பிரிவு 1**

வேல்விழி கலையழகன் (பண்ணாகம் மெய். ம.வி), ஸ்ரீநாராயணி கேதீஸ்வரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), உதயகுமார் கம்சாயினி (அருணோதயக் கல்லூரி)

**கட்டுரை வரைதல் பிரிவு 2**

அபிராமி ஜீவராசா (மூளாய் சைவப்பிரகாச வித்தி), சிறிதரன் தேனுசன் (அருணோதயக் கல்லூரி), வேணுஜா சாந்தகுமாரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**கட்டுரை வரைதல் பிரிவு 3**

ஜசிந்தா செல்வராசா (வயாவிளான் மகா வித்தி), அனுசிகா ஜெயராசா (மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம்), சரணியா சசிகுமார் (இணுவில் இந்துக் கல்லூரி)

**கட்டுரைவரைதல் இலக்கியம் நயத்தல் பிரிவு4**

உமையாழினி தேவதாசன் (அருணோதயக் கல்லூரி), சாளினி சிறிதரன் (மகாஜனக் கல்லூரி), சிந்துஜா நேசராசா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

**தமிழியற் கட்டுரை இலக்கியம் நயத்தல் பிரிவு 5**

காயத்திரி தேவசுதன் (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), ஸ்ரெலாஸ் ராஜ்குமார் அனோயன் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி), ர.கோமதி (வயாவிளான் ம.வி.)

**இலக்கணப்போட்டி பிரிவு 4**

காருண்ணியா குணரட்ணம் (உடுவில் மகளிர் கல்லூரி),இரத்தினம் ஜசிந்தன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), செல்வி சோபிதா சுரேஸ்குமார் (மகாஜனாக் கல்லூரி)

**இலக்கணப்போட்டி பிரிவு 5**

நிரோஜா சிறிஸ்கந்தராஜா (மகாஜனாக் கல்லூரி), கம்சிகா ராஜ்குமார் (உடுவில் மகளிர் கல்லூரி), சொர்ணலிங்கம் தருமதன் (யூனியன் கல்லூரி).

(தொடரும்...)

# பதிவிறக்கப் பெட்டகம்

மரணத்துக்கு பின் வழங்கப்படும் சலுகைகளால் அந்த இழப்புகள் ஊனமாக்கப்பட்டன அல்லது அழயோடு புதைக்கப்பட்டன. மாவீரர்கள் அல்லது ரணவிருக்கள் எல்லோருமே பீரங்கிக்கு போடப்பட்ட தீனிதான், மற்றும் அவர்கள் சிந்திய இரத்தம்,போரின் வழவமைப்பை எந்த விதத்திலும் மாற்றியமைக்கவில்லை. பக்கவரிசையில் பார்வையாளர்களாக நின்ற எங்களைப் பற்றி என்ன சொல்வது? வாழ்க்கை ஆதிக்கம் செய்வதோ அல்லது சிதைக்கப்படுவதோ ஒரளவிற்கு மோதல்கள் மற்றும் அது தொடர்பான ஈர்ப்பு மூலமாகத்தான் தீர்மானிக்கப்படுகிறது. ஏதோ ஒன்றை நினைத்து அதற்காக உயிர் விட்ட ஏராளமானவர்களை நினைத்துப் பார்க்காமல் அதிலிருந்து விலகி நடப்பது கழனமான ஒன்று. மேலும் நாங்களும் அதே குட்டையில் ஊறிய மட்டைகள் அல்லவா?. 30 வருட மேடையில் அரங்கேறியவர்களின் பாத்திரங்களும் அது தொடர்பான நிகழ்வுகளும் எங்கள் நினைவுகளிலிருந்து மங்கிப் போய்க் கொண்டிருக்கின்றன.

**– கப்டன் எல்மோ ஜயவர்தன**

நாங்களாக மாறுவதற்கு நாங்களே தவறிவிட்டோம்.

**– தயான் ஜயதிலக**

மனிதர்களின் இயல்பான குரல் பன்மைத் தன்மைதான் (polyphony). ஆனால் ஒற்றைத் தன்மையதாகப் புரிந்து கொள்ளவே நாம் பயிற்றுவிக்கப்படுகிறோம். இன்றைய அரசியலின் தலையாய பணியும் அதுவாகத்தான் உள்ளது. கலையும் இலக்கியமும்தான் நம்மை இந்நிலையிலிருந்து காப்பாற்றும் வல்லமை உடையவை. மனிதர்களின் இந்தப் பன்முகத் தன்மையை, பல குரல் தன்மையைக் கொண்டாடும் மனநிலையைக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிப்போம்.

**– அ.மார்க்ஸ்**

சுற்றுச் சூழல் குறித்து இன்றைக்கு கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறோம். உண்மையில் மனிதர்களுக்குச் சுற்றுச் சூழலிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் உரிமை வேண்டியதில்லை. சுற்றுச் சூழலுக்கே மனிதர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை வேண்டியிருக்கிறது.

**– லெவி ஸ்ற்றோஸ்**

ஒருவனிடம் தண்ணீரையும் நிலத்தையும் கொடுத்துவிட்டால் அந்தக் குடும்பம் எப்படியாவது பிழைத்துக் கொள்ளும். அந்தக் குடும்பத்தில் உள்ள குழந்தை முதல் வயதானவன் வரை அந்நிலத்தில் வேலை செய்வார்கள். அவ்வளவு ஏன் அவன் கழிக்கும் மலம் ஜலமே செடி கொடிகளை வளர்த்து விடும். அதுதானே எரு. அவன் வைத்திருக்கும் ஆடு சாணி போடும். மாடு சாணி போடும். ஆட்டுப் பாலை குழந்தை குடிக்கும். மாடு கொடுக்கும் பால் தயிராகி அவர்களின் சாப்பாட்டிற்கு சேரும். சக்தி தரும் ஒரு முருங்கை மரம் போதும் அவர்களுக்கு. ஒரு பப்பாளி மரம் போதும். இவர்களுக்கு நிலமே இல்லாத வேலைகளைத்தான் இந்த வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் செய்கிறது. உடனடியாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், இன்றைக்கு வளர்ச்சித் திட்டம் என்று எதை எதையோ செய்து கொண்டிருக்கிறோமே, அதை உடனடியாக நிறுத்திவிட வேண்டும். போட்டதை அப்படியே போட்டு விட்டுத் திரும்பி நிற்க வேண்டும். எங்கிருந்து நாம் தப்பு செய்தோமோ அந்த இடத்திற்குத் திரும்பிப் போனதற்கு பிற்பாடுதான் வளர்ச்சியைப் பற்றி யோசிக்க வேண்டும்.

**– நம்மாழ்வார்**

பகுத்தறிவும் விஞ்ஞானமும் கோலோச்சும் இந்தக் காலகட்டத்தில் பாவம் புண்ணியம் என்ற விஷயங்களில் எல்லாம மக்களுக்கு நம்பிக்கை போய் விட்டது. பிடுங்கும் வரை லாபம். அடுத்தவன் சொத்தைக் கொள்ளையடி. எதெல்லாம் இலவசமாகக் கிடைக்கிறதோ அதெல்லாம் நமக்குச் சேர வேண்டிய சொத்து. எருமைச் சாணி என்றால் கூட இலவசம் என்றால் முதல் ஆளாய் நில். பணமே கடவுள். கடவுளை வழிபடடால் பணம் கொட்டும். முடிந்த வரை அடுத்தவனைச் சுரண்டு. இந்த உலகத்தில் நாம் மட்டுமே வாழ வேண்டும். அடுத்தவன் எக்கேடு கெட்டாலும் நமக்கு என்ன? நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோமோ அதுதான் நியாயம் மற்றவன் செய்வதெல்லாம் அநியாயம். நாம் மட்டுமே ஞானி அடுத்தவன் அஞ்ஞானி. இதுதான் இன்றைய விஞ்ஞான யுகத்தின் பகுத்தறிவு.

**– சாரு நிவேதிதா**

# குற்றச் செயல்களில் அரசியல்வாதிகள் ஆளும் கட்சியினரே அதிகம்

## வெளிக்கிளம்புகிறது பூதம்

(கொழும்பு)

நூற்றுக்கும் மேற்பட்ட ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலியல் வன்கொடுமை, ஊழல்மோசடி, கொள்ளை மற்றும் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐம்பது அரசியல்வாதிகள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை, பத்து அரசியல்வாதிகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். ஏனையவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டு காலப்பகுதியிலேயே அதிகளவான ஆளும் கட்சி அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அண்மைக்காலமாக ஆளும் கட்சி அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற அரசியல்வாதிகளுக்கு எதிராகவே அதிகளவான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

# பள்ளி மாணவி மரணம் பரீட்சைப் பெறுபேறு காரணமா?


(கொழும்பு)

ஊரகஸ்மங்கந்திய பொலிஸ் பிரிவில் இதுருவலவத்தை பிரதேசத்தில் பாடசாலை மாணவி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறு தனக்கு தோல்வியை அளித்ததால் மனமுடைந்த மாணவி இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அனுராத விக்ரமரத்ன எனப்படும் 16 வயது மாணவியே தற்கொலை செய்து கொண்டவராவார். பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வட்டவளை - ரொசல்ல பகுதியில் நேற்று முன்தினம் தந்தை ஒருவர் தனது மகன் சா/த பரீட்சையில் தோல்வி அடைந்ததை தாங்கிக் கொள்ள முடியாது தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# கருணாவின் ஆயுதக் களஞ்சியம் முஸ்லிம் தீவிரவாதிகளிடம் கைமாறியதா?

## அமெரிக்காவின் கைகளில் தரவுகள்

(கொழும்பு)

கருணா குழுவினரின் ஆயுதங்கள் கிழக்கின் முஸ்லிம் தீவிரவாதிகளின் கைகளுக்கு மாறியுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் கருதுகிறது.

கிழக்கு இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளின் அங்கத்தவர்கள் 'ஜிகாத்' நடவடிக்கைக்காக வெளிநாடுகளுக்குச்சென்று ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளனர்.

அவ்வாறான இளைஞர்கள் 'ஜிகாத்' நடவடிக்கைக்கு எந்த நேரத்திலும் தயாராக இருந்தனர்.

இச்சந்தர்ப்பத்திலேயே புலிகள் இயக்கத்திலிருந்து கருணா குழுவினர் பிரிந்துசென்றனர்.

அப்போது புலிகளின் கணிசமான ஆயுதங்கள் கருணா குழுவிடம் இருந்தது அதற்குப் பிற்பட்ட காலத்தில் கருணா குழுஅங்கத்தவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டமையால் அவர்களின் ஆயுதங்கள் பல கைவிடப்பட்ட நிலைக்குச் சென்றன.

இந்த ஆயுதங்கள் அனைத்தும் பின்னர் முஸ்லிம் தீவிரவாதிகளின் கைகளுக்குச் சென்றடைந்தன என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஆவணக்கோப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல் வெளியிட்டிருக்கிறது.

# இந்திய திரைப்படங்களை தடை செய்யுங்கள்

## பிரதி அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

ரஜினிகாந்த், கமலஹாசன், விஜய் போன்ற தென்னிந்திய சினிமா கலைஞர்களின் திரைப்படங்கள் இலங்கையில் திரையிடப்படுவது தடைசெய்யப்பட வேண்டும் என பிரதிப் போக்குவரத்து அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். உலக வரைபடத்தில் இருந்த இலங்கையை அகற்றும் அளவிற்கு தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் மாறியுள்ளனர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என இலங்கையின் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் முழு உலகத்திற்கு எடுத்து கூறியுள்ள நிலையில், ரஜினிகாந்த், கமலஹாசன், விஜய், அஜித்குமார், சரத்குமார் போன்ற நடிகர்கள் இணைந்து உண்ணாவிரதம் இருந்தனர்.

இதனால் இந்த நடிகர்கள் நடித்துள்ள திரைப்படங்களை இலங்கையில் திரையிடுவதை தடைசெய்ய வேண்டும் இவ்வாறான காட்போர்ட் வீரர்களை சூப்பர் ஸ்டார்களாகக் கருதிய காலத்தை நாம் முடிவுக்கு கொண்டு வரவேண்டும் எனவும் திஸாநாயக்க கூறியுள்ளார்.

# தகவல்தொழில்நுட்ப கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தொழிற்துறை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி இன்று மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள பிள்ளையார் விடுதியில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.யோகராஜசிங்கம் அறிவித்துள்ளார்.

# ஆயுத கலாசாரத்தின் ஆணிவேர் ஜே.வி.பி. புனிதர்களாக இன்று நடிப்பது வேடிக்கை

## அந்த நாள் ஞாபகப்பகிர்வு

(கொழும்பு)

சுதந்திர இலங்கையின் ஆயுதப் புரட்சி ஆரம்பமாகி மனித மற்றும் பொருள அழிவுக்கு வித்திட்ட தினமாக 1971 ஆம் ஆண்டின் ஏப்ரல் 4 ஆம் திகதி நம்நாட்டு மக்களினால் வேதனையுடன் நினைவு கூரும் ஒரு நாளாக இருக்கின்றது.

இதற்கு முன்னர் இலங்கையில் என்றுமே ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தை கவிழப்பதற்கு எவருமே ஆயுதம் தாங்கி, பொலிஸ் நிலையங்களைத் தாக்கி புரட்சி ஒன்றை ஏற்படுத்தவில்லை.

அப்பாவி சிங்கள இளைஞர்களை ஏமாற்றி அவர்களுக்கு இரகசியமான முறையில் அன்றைய ஜே.வி.பி. இயக்கத் தலைவர் ரோஹண விஜேவீர, கம நாயக்க உட்பட முக்கிய தலைவர்கள் 5 பாடங்களைக் கற்பித்து இளைஞர்களின் மனதை மாற்றி ஆயுதம் தாங்கி போராட்டம் நடாத்தி அரசாங்கத்தைக் கவிழ்த்தால் மாத்திரமே சிங்கள இளைஞர்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று கூறி அவர்களை அழிவுப் பாதையில் இட்டுச் சென்றார்கள்.

வேட்டையாடுவதற்கு பயன்படுத்தும் சாதாரண துப்பாக்கிகளையும், வீடுகளில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளையும் வைத்து ஜே.வி. பி தலைவர்கள் 1971 ஆம ஆண்டின் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

ஏப்ரல் 5 ஆம் திகதி இரவு அனைத்து பொலிஸ் நிலையங்களையும் திடீரென்று தாக்குவதென்று ஜே.வி.பி தலைவர்கள் போட்டிருந்த சதித்திட்டத்தில் தெய்வாதீனமாக ஒரு சிறு பிழை ஏற்பட்டதனால், இலங்கையில் மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் இந்த ஆயுதப் போராட்டத்தின் மூலம கவிழ்க்கப்படுவது தவிர்க்கப்பட்டது.

ஜே.வி.பி தலைவர்களின் திட்டப்படி 5 ஆம் திகதி இரவு பொலிஸ் நிலையங்களை தாக்குவதற்கான இரகசிய ஆயத்தங்கள் தயார் நிலையில் இருந்தது. ஆயினும் ஜே.வி.பி.யின் ஒரு குழுவினர் தவறுதலாக ஏப்ரல் 4 ஆம் திகதி இரவு வெல்லவாய பொலிஸ் நிலையத்தை தாக்கினார்கள்.

இந்தச் செய்தி வெளிவந்த சில நிமிடங்களில் சகல பொலிஸ் நிலையங்களும் இத்தகைய தாக்குதலுக்கு தயார் நிலையில் இருந்தன. பொலிஸாருக்கு இந்த இரகசியம் தெரிந்துவிட்ட விஷயத்தை அறியாது இருந்த ஜே.வி.பி. குழுக்கள் நாடெங்கிலும் உள்ள பொலிஸ் நிலையங்களை இரவில் தாக்கியபோது பொலிஸாரின் பதில் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஜே.வி.பி கிளர்ச்சிக்காரர்கள் ஓடி மறைந்தார்கள்.

அன்றிரவே பொலிஸாரும், இராணுவத்தினரும் நாடெங்கிலும் சுற்றி வளைத்து தேடுதல்களை நடாத்தி நூற்றுக்கணக்கான இளைஞர்களை விசாரணையின்றி சுட்டுக் கொன்றார்கள்.

அதையடுத்து இடையிடையே மறைந்திருந்த ஜே.வி.பி கிளர்ச்சிக்காரர்களை அழித்து விடுவதற்கு அன்றைய பிரதம மந்திரியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் கோரிக்கையை அடுத்து இந்திய விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் பேருதவியாக அமைந்தன.

பிரதம மந்திரி ஸ்ரீமாவோ அம்மையார் தாயுள்ளம் கொண்ட கருணை மிக்கவர் அதனால் அவர் காடுகளிலும், வேறிடங்களிலும் தலை மறைவாகியிருந்த சிங்கள இளைஞர்களை வந்து சரணடையுமாறு அறிவித்தார்.

பிரதம மந்திரியின் வேண்டுகோளுக்கு அமைய ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பொலிஸ் நிலையங்களிலும் இராணுவ முகாம்களிலும் சரணடைந்தனர்.

பின்னர் ஆயுதப் போராட்டத்தின் முக்கிய தலைவர்களுக்கு எதிராக மாத்திரம் குற்றவியல் நீதி ஆணைக்குழு என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு குற்றம் இழைத்தவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஜே.வி.பியின் முக்கிய தலைவர்களான ரோஹண விஜேவீர, கம நாயக்க போன்றவர்களுக்கு ஆணைக்குழு சிறைத் தண்டனையை விதித்து மற்றவர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்புமாறு உத்தரவிட்டது.

1971 ஆம் ஆண்டின் ஜே.வி.பி தலைவர்கள் மேற்கொண்ட இந்த அராஜகத்தினால் எங்கள் நாட்டின் தலையெழுத்தே ஒருவேளை மாற்றம் அடைந்திருக்கலாம். இலங்கையில் துப்பாக்கி கலாசாரத்தை முதன் முதலில் அறிமுகம் செய்த பொறுப்பை ஜே.வி.பி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஜே.வி.பி ஆயுதம் தாங்கி போராட்டம் செய்த காலகட்டத்தில் தமிழ் இளைஞர்கள் தங்கள் கல்வியில் மாத்திரமே கவனம் செலுத்தி வந்தார்கள். அவர்களுக்கு ஆயுதப் போராட்டம் என்றால் என்ன என்று கூடத் தெரியாது இருந்தது. இந்த ஆயுத கலாசாரத்தை தமிழ் இளைஞர்களுக்கும் அறிமுகம் செய்து அவர்களை அழிவுப் பாதையில் இட்டுசென்ற பொறுப்பையும் ஜே.வி.பி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் எங்கள் நாட்டுக்கு பெரும் துரோகம் இழைத்த ஜே.வி.பி யினர் இன்று அப்பாவிகளைப் போல் நடித்து ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள அரசாங்கக் கட்சியையும், ஐக்கிய தேசியக் கட்சி போன்ற கட்சிகளையும் விமர்சித்து தாங்கள் நற்பண்பாளர்கள் போன்று நடிப்பதைப் பார்த்து மக்கள் தங்களுக்குள் சிரிக்கிறார்கள்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானமும், தொழில்நுட்பவியலும்**

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

*நேற்றைய தொடர்ச்சி....*

**2)** தற்போது 40 வயதிற்கு மேற்பட்டவர்களில் பலர் நீரிழிவு நோயால் பீடிக்கப்படுதல் அதிகரித்துக் காணப்படுவதாக தரவுகள் காட்டுகின்றன.

i) நீரிழிவு நோய் என்றால் என்ன?

ii) இந்நோயுடன் தொடர்புடைய சுரப்பி யாது? சுரப்பி வகை யாது?

iii) நீரிழிவு நோயால் ஒருவர் பீடிக்கப்பட்டுள்ளாரா என்பதை அறிய உதவும் பரிசோதனை யாது?

iv) நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் தவிர்க்க வேண்டிய உணவு வகைகளில் உள்ள போசனைக் கூறு யாது?

v)

a) மேலே (iv) இல் நீர் குறிப்பிட்ட போசனைக்கூறு தவிர்ந்த வேறு இரு போசனைக்கூறுகளைக் குறிப்பிடுக.

b) இவற்றை இனங்காண உதவும் சோதனைப் பொருட்களைத் தருக.

c) சோதனைப் பொருட்களுடனான அவதானங்களையும் குறிப்பிடுக.

vi) (v) இல் குறிப்பிட்ட போசனைக் கூறுகள் அடங்கியுள்ள தாவர உணவுகள் 2 வீதம் தருக.

vii) இவ்வுணவுக் கூறுகள் சேமிக்கப்பட்ட தாவரப்பகுதிகள் 2 தருக.

viii) தாவரங்களில் இவ்வாறு உணவு சேமிக்கப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**03)** நவீன ஆவர்த்தன அட்டவணையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. ஆவர்த்தன அட்டவணையை முதன் முதலில் அமைத்தவர் மெண்டலீவ் என்பவராவா.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| H | | | | | | | He |
| Li | Be | B | C | N | O | F | Ne |
| Na | Mg | Al | Si | P | S | Cl | Ar |
| K | Ca | | | | | | |

i) நவீன ஆவர்த்தன அட்டவணைக்கும் மெண்டலீவின் ஆவர்த்தன அட்டவணைக்கும் இடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

ii) a) மூலகங்கள் பாகுபடுத்தப்படவேண்டியதன் அவசியம் யாது?

b) இதுவரையில் எத்தனை மூலகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

iii) மூலகம் B இன் இலத்திரன் நிலையமைப்பிற்கும், அதன் வலுவளவிற்கும் அதன் கூட்ட எண்ணிற்குமிடையேயான தொடர்பு யாது?

iv) a) உலோகப்போலிகள் 2 தருக.

b) உலோகங்கங்கள் 2 தருக

v) a) mg ஐ வளியில் எரிக்கும்போது கிடைக்கும் அவதானிப்புக்களைக் குறிப்பிடுக.

b) இவற்றைக் காட்டுவதற்கான சமன்செய்த சமன்பாட்டினைக் குறிப்பிடுக.

vi) a) Ca, ஒட்சிசனுடன் தருக்கத்திலீடுபடும் போது கிடைக்கும் சேர்வையின் சூத்திரம் யாது?

b) இதன் பிணைப்பு வகை யாது?

vii)

a) இச்சேர்வைக்கு நீர் சேர்க்கும்போது கிடைக்கும் விளைவு யாது?

b) இதன் பயன்கள் 2 தருக.

c) கைத்தொழில் ரீதியில் இச்சேர்வை எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது.

**04)** **ஆரோக்கியமான ஒருவரின் உடலில் 100 ml குருதியில் 13.5 g - 17.5 g அளவில் ஈமோகுளோபின் காணப்படுகின்றது.**

i)

a) ஈமோகுளோபின் அடங்கியுள்ள குருதித்துணிக்கை யாது?

b) ஈமோகுளோபின் அளவு பெருமளவில் குறைவதால் ஏற்படும் நோய் நிலைமை யாது?

c) இதனைக் கண்டுகொள்வதற்கான அறிகுறிகள் எவை?

ii) a) ஈமோகுளோபின் உற்பத்திக்குத் தேவையான கனிப்பொருள் யாது?

b) இக்கனிப்பொருள் அடங்கியுள்ள உணவுப் பதார்த்தங்கள் 2 தருக

iii) ஈமோகுளோபின் குறைவதற்கான காரணங்கள் 2 தருக

iv) வளர்ந்த ஒருவரில் அண்ணளவாக எவ்வளவு குருதி காணப்படலாம்.

v) குருதித் திரவவிழையத்தில் காணப்படும் உணவு தவிர்ந்த ஏனைய கூறுகள் 4 தருக.

vi) குருதி மாறூடு செலுத்தலின்போது குருதி வழங்குபவர் 80% மேற்பட்ட ஈமோகுளோபினை குருதியில் கொண்டிருத்தல் வேண்டும்.

a) குருதி மாறூடு செலுத்தும் சந்தர்ப்பங்கள் எவை?

b) குருதி வழங்குபவர் கொண்டிருக்கவேண்டிய இயல்புகள் 4 தருக.

c) குருதி மாறூடு செலுத்தல் முதன்முதலில் எப்போது மேற்கொள்ளப்பட்டது.

d) குருதி மாறூடு செலுத்தும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் 2 தருக.

**05)** **புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு பொருட்கள் பலவாகும். அவற்றில் காரீயம், இரத்தினக்கல், கனியமணல், கனியநெய் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.**

i) இங்கு குறிப்பிடப்படாத ஆனால் புவியிலிருந்து பெறும் பயன்மிகு பொருட்கள் 3 தருக.

ii) இவற்றில் முதன்மை இடத்தைப் பெறும் வளம் எது? இதற்குக் காரணம் யாது?

iii) a) கண்ணாடி தயாரிப்பில் பயன்படும் மூலப்பொருள் எது?

b) இம்மூலப்பொருள் பெருமளவில் கொண்டிருக்கும் மூலகம் எது?

c) இம்மூலப்பொருள் அதிகளவில் காணப்படும் 2 இடங்கள் தருக.

iv) பல பாண்டங்கள் தயாரிப்பதற்குக் கண்ணாடி பயன்படுத்தப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

v) பாறைகளையும், கனியங்களையும் வேறுபடுத்தி அறியும் முறைகள் 4 தருக.


vi) a) கனியநெய் உற்பத்திப் பொருட்கள் 3 தருக.

b) செயற்கைப் பிரதியீட்டுப் பொருட்கள் 4 தருக.

vii) கடதாசியை விடப் பொலித்தீன் பயன்படுத்துவதனால் ஏற்படும்

a) அனுகூலங்கள் 2 தருக b) பிரதிகூலங்கள் 2 தருக

**06)** **மின்னோட்டம் காவப்படும் கம்பியைச் சூழ மின்காந்தப்புலம் உண்டாகும். மாணவன் ஒருவன் அமைத்த பரிசோதனை வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.**




i) இங்கு மென்னிரும்பு பயன்படுத்துவதன் நோக்கம் யாது?

ii)

a) சுற்று I, சுற்று II ஆகியவை எதனால் ஆனவை.

b) சுற்றை ஆக்கியுள்ள பதார்த்தத்தின் மேலுள்ள பூச்சு யாது?

iii)

a) ஆளி S ஐ மூடும்போது அவதானம் யாது?


b) ஆளி S ஐ திறக்கும்போது அவதானம் யாது?

iv) இவ் அவதானிப்புக்களிலிருந்து நீர் விளங்கிக்கொள்ளும் தத்துவம் யாது?

v) இத் தத்துவத்தின் அடிப்படையில் தொழிற்படும் அமைப்பு யாது?

vi) இங்கு சுற்று I 50 சுற்றுக்களைக் கொண்டது. மின்குமிழ் 12 V இல் ஒளிரக்கூடியது எனில் சுற்று II எத்தனை சுற்றுக்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

vii) சுற்று II இல் "X" எனப்படும் ஓர் அமைப்பை மாணவன் இணைத்த விதம் பின்வருமாறு.




a) அமைப்பு "X" யாது?
b) இதன் தொழில் யாது?
c) தற்போது ஆளி S ஐத் திறக்கும்போதும் உமது அவதானம் யாது?
d) அவதானத்திற்கான காரணம் யாது?

**07) பின்வருவனவற்றில் எவையேனும் ஐந்தை விஞ்ஞான ரீதியில் விளக்குக.**

i) காய்ச்சலால் பீடிக்கப்பட்டவரின் உடல் ஈரமான துணித்துண்டினால் அடிக்கடி துடைக்கப்படுகின்றது.
ii) உணவு வகைகள் சூடாக இல்லாதபோது அயடீன் கலந்த கறியுப்பு சேர்க்கப்படல் வேண்டும்.
iii) புகையூட்டுவதன் மூலம் காய்களை விரைவில் பழுக்கவைக்கலாம்.
iv) மரத்தளபாடங்களை நீண்டகாலம் பேணிப் பாதுகாப்பதனால் இயற்கை வட்டங்களிற்குப் பாதிப்பு ஏற்படுகின்றன.
v) சலவைத்தூள்களில் புளோர் ஒளிர்வுப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன.
vi) மழைநீர் மோட்டார் வாகன மின்கல அடுக்குகளிற்கு விடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**08) நன்னீர்த்தடாகம் ஒன்றின் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.**



i) படத்தில் உள்ளவற்றைக் கொண்டு 5 இணைப்புக்கள் உள்ள உணவுச்சங்கிலியை எழுதுக.

ii)
a) இனம் என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
b) இங்கு காணப்படும் அங்கி இனங்கள் 2 தருக.

iii)
a) நனனீர்த் தடாகம் கொண்டுள்ள 2 வகையான சூழலையும் தருக
b) இச்சூழல்களை ஆக்கியுள்ள கூறுகளைக் குறிப்பிடுக.

iv) இத்தடாகத்தில் பல்வேறு குடித்தொகைகள் உள்ளன.
a) குடித்தொகையில் குறிப்பிடப்படவேண்டிய முக்கிய அம்சங்கள் எவை?
b) இங்கு குடித்தொகை மாறுபடும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

v) நன்னீர்த்தடாகம் ஒரு சாகியமாகவும், சூழற் தொகுதியாகவும் கொள்ளப்படலாமெனில் அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.


vi) நன்னீர்த்தடாகத்தில் நுளம்புக்குடம்பிகள் காணப்படவில்லை. இதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

vii) a) தடாகத்து நீரில் DDT கலந்திருப்பின் அது எவற்றில் உயர் செறிவில் காணப்படும்.
b) உமது விடையை விளக்குக.

viii) தடாகத்தின் கரையில் சண ற்தாவரம் காணப்பட்டது.
a) சண ற்தாவரம் கொண்டுள்ள விசேட இயல்பு யாது?

b) இவ்வியல்பைப் பெற அத்தாவரம் கொண்டுள்ள இருபக்கத் தொடர்பு எவ்வாறு அழைக்கப்படுகின்றது.

**09) மனிதக்காதின் அகக்கட்டமைப்பு வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.**




i) A, B, C, D, E ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

ii)
a) மனிதக் கேள்தகைமை எல்லை எவ்வளவு?
b) இவ்வெல்லைக்கு மேற்பட்ட ஒலிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

iii)
a) அமைப்பு D யின் தொழில் யாது?
b) அமைப்பு B யின் இரு பக்கங்களிலும் அமுக்கத்தைச் சமமாகப் பேணும் பகுதி எது?

iv) புறச்செவிக் கால்வாயினுள் குடும்பி வாரி அல்லது காது சுரண்டியை செலுத்துவதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறிப்பிடுக.

v) நடுச் செவியில் தொற்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் சிலவேளைகளில் மூக்கினால் உறிஞ்சக்கூடிய மருந்துகள் வழங்கப்படுவதுண்டு. இதற்கான காரணம் யாது?

vi) வினா (ii) b இல் நீர் குறிப்பிட்ட ஒலி, பயன்படும் சந்தர்ப்பங்கள் 5 தருக.

vii) வெளவால் தடைகளை விலத்திப் பறப்பதற்கு காதுகளைப் பயன்படுத்துகின்றன.
a) இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?

b) உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.

viii) ஒலிமுதல் ஒன்றிலிருந்து வரும் ஒலி மூளையைச் சென்றடையும் விதத்தை குற்றி வரிப்படம் மூலம் காட்டுக.

**10) ஓடுகளினால் வேயப்பட்ட வீடுகளினுள் நிலவும் வெப்பத்தை விட (சீற்) "அஸ்பெஸ்டஸ்" இனால் வேயப்பட்ட வீடுகளினுள் வெப்பம் அதிகமாகக் காணப்படும். மேற்படி கருதுகோளைச் சோதிப்பதற்காக மாணவர்குழு ஆய்வில் ஈடுபட்டது. இதற்காக ஒரே மாதிரியான சூழலில் உள்ள ஓடு, அஸ்பெஸ்டஸ் ஆகியவற்றால் வேயப்பட்ட இரு வீடுகள் உள்ள சம அளவும், ஒரே மாதிரியானதுமான அறைகளைத் தெரிவு செய்து அவை ஒவ்வொன்றினுள்ளும் 24 மணித்தியாலங்களில் நிலவிய வெப்பநிலை பதிவுசெய்தது. அவ்வாசிப்புக்களில் இருந்து கருதுகோள் சரிபார்க்கப்பட்டது.**

i) 'ஓடுகள்' ஆக்கப்பயன்படும் மூலப்பொருள் யாது?
ii) இதற்காக அம்மூலகப் பொருள் கொண்டுள்ள சிறப்பியல்பு யாது?
iii) ஓடு தயாரிக்கப்பட்ட பின்னர் சூளையில் வைத்து சுடப்படுவதற்கான காரணம் யாது?


iv) வெப்பம் தவிர்ந்த
a) அஸ்பெஸ்டஸ் கொண்டுள்ள சிறப்பியல்பு ஒன்று தருக.
b) பிரதிகூலம் ஒன்று தருக.

v) இங்கு சம அளவு கொண்ட அறை தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணம் யாது?

vi)
a) மேற்படி கருதுகோள் தொடர்பாக எடுக்கவேண்டிய வாசிப்புக்கள் எவை?
b) இவ்வாசிப்புகளிலிருந்து நீர் முடிவுக்குவரும் விதம் பற்றி விளக்குக.

vii)
a) இங்கு பெறப்பட்ட வாசிப்புகள் திருத்தமானதாக இருக்குமா?
b) உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

**11) நைதரசன் கழிவை அகற்றுவதற்கு உடலில் சிறுநீரகத்திலுள்ள சிறுநீர் ஆத்தியை கீழேயுள்ள படம் காட்டுகின்றது.**




1) இவ்வாறான சிறுநீரகக்கூத்திகள் ஒரு சிறுநீரகத்தில் எத்தனையுள்ளன?
2) சிறுநீரகத்தினால் அகற்றப்படும் நைதரசன் கழிவுகள் இரண்டைக் குறிப்பிடுக.
3) அ) A, B, C ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
ஆ) வினைத்திறனாக குருதியை வடிகட்டுவதற்கு B இல் உள்ள இசைவாக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
4) அ) கலன்கோள வடிதிரவம் என்றால் என்ன?
ஆ) குருதியில் காணப்படுவதும் கலன்கோள வடிதிரவத்தில் காணப்படாததுமான இரண்டு பதார்த்தங்களைக் குறிப்பிடுக.
5) சுகதேகியொருவரின் கலன்கோளத்திலிருந்து முழுமையாக மீண்டும் அகத்துறிஞ்சப்படும் பதார்த்தங்களைக் குறிப்பிடுக.

# காஷ்மீரில் நிலநடுக்கம்




காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் பகுதியில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 5.4 ஆக பதிவானது. ஆப்கானிஸ்தானின் இந்து குஷ் மலைப் பகுதியை மையமாக வைத்து நில நடுக்கம் உருவானது. இதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. வீடுகள் லேசாகக் குலுங்கியதால் மக்கள் பீதி அடைந்தனர்.

# ராகுல்காந்தி பிரதமராவதை முழுமனதுடன் வரவேற்கிறேன்

பிரதமர் பதவியில் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் கட்சியின் தலைவராக சோனியா காந்தியும் வெகுகாலம் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது.

மாற்றங்கள் கண்டிப்பாக வர வேண்டும், அதனைத் தொடர்ந்து தேர்தலில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திக் விஜய் சிங் கருத்து வெளியிட்டார்.

ஆனால் இதைக் காங்கிரஸ் அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர் ஜனார்த்தன் திவிவேதி நிராகரித்திருப்பதைத் தொடர்ந்து இநதப் பிரச்சினை மைய விவாதப் பொருளாகி இருக்கிறது.

இந்த நிலையில் டில்லியில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடந்த "பத்ம விருது" வழங்கும் விழாவின் இடையே நிருபர்களிடம் பிரதமர் மன்மோகன்சிங் பேசினார். அப்போது அவரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

# கழிவு நீரைக் குடித்த 6 பேர் சாவு 500 பேர் சிகிச்சைக்காக அனுமதி



(காசியாபாத்)

குடிநீரில் கழிவு நீர் கலந்ததால் நச்சுத்தன்மையான நீரைக் குடித்த 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

உத்தரபிரதே மாநிலம், காசியாபாத் நகர் டில்லியில் இருந்து 20 கி.மீற்றர் தூரத்தில் உள்ளது. காசியாபாத் நகரின் லோனி பகுதியில் ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளதால் அப்பகுதியின் நிலத்தடி நீரில் உலோகக் கழிவுகள் படிந்து, நீரின் மாசுத்தன்மை அதிகமாக உள்ளது.

நகரின் பல இடங்களில் குடிநீர் குழாய் புதைகப்பட்டுள்ள பள்ளங்களில் கசிவுடன் கூடிய கழிவுநீர் குழாய்களும் செல்வதால் குடி நீரில், கழிவுநீரும் கலந்து விடுகிறது. இந்நிலையில், கழிவுநீர் கலந்த குடிநீரை பருகிய பலருக்கு திடீர் வாந்திபேதி ஏற்பட்டது. இதனையடுத்து நூற்றுக் கணக்கான மக்கள் காசியா பாத் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்படடனர்.

சிகிச்சை பலனின்றி 6 பேர் உயிரிழந்தனர். 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப் படுகிறது.


# பாகிஸ்தானின் மூத்த குடிமக்கள் இந்தியா வர உடனடி விசா




இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையில், கடந்த செப்டம்பர் மாதம் ஏற்பட்ட விசா ஒப்பந்த அடிப்படையில், இரு நாடுகளின் மூத்த குடிமக்களுக்கும் உடனடி நுழைவு அனுமதி வழங்குவதென்ற முடிவு ஏற்பட்டது.

இந்திய எல்லையான அட்டாரி அல்லது வாகா எல்லை வழியாக, இந்தியாவிற்குள் வருபவர்களுக்கு, 45 நாட்களுக்கு, ஒரு வழி நுழைவு அனுமதி வழங்கப்படும் என்று அரசு தெரிவித்தது.

இந்த ஏற்பாடு, கடந்த ஜனவரி 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக இருந்தது. ஆனால், ஜனவரி 8 ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவம், இரு இந்தியர்களைச் சுட்டதாக எழுந்த பிரச்சினையினால் இந்தத் திட்டம் தள்ளிப்போடப்பட்டது. கடந்த இரு மாதங்களாக, இது குறித்த தீவிர விவாதங்களுக்குப்பின், தற்போது இந்திய அரசு, இத்திட்டத்தைத் தொடர அனுமதி அளித்துள்ளது.




# சோனியா காந்தியின் மருமகனின் மோசடிகளை அம்பலப்படுத்தியவருக்கு 44 ஆவது இடமாற்றம்

(சென்னை)

சோனியா காந்தியின் மருமகன் ராபர்ட் வதேரா, கடந்த வருடம் ஹரியானா மாநிலத்தில் ஏராளமான விளைநிலத்தை அடிமாட்டுக்கு வளைத்துப் போட்டு அதை டிஎல்ப் நிறுவனத்துக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்தார் என்று முறைப்பாடுகள் எழுந்தன.

இது அரசியல் அரங்கில் பெரும் புயலைக் கிளப்பியது. விவசாயிகளிடம் நிலம் பலவந்தமாக பறிக்கப்பட்டது என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து வந்ததால் ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக் கேம்கா, அப்போது பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அதன் பின்னர் ஓராண்டுக்குள் 3 முறை வெவ்வேறு துறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

கடைசியாக ஹரியானா விதை அபிவிருத்திக் கழகத்தில் நிர்வாக மேலாளராக அவர் பணியாற்றி வந்தார். அங்கும் கேம்கா சும்மா இருக்கவில்லையே. விதை கொள்முதல் ஊழலை வெளிக்கொண்டு வந்து சி.பி.ஐ. விசாரணைக்கும் பரிந்துரைத்தார்.

மேலும் இது தொடர்பான பொதுநலன் வழக்கு ஒன்றில் ஏப்ரல் 12 ஆம் திகதிக்குள் மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறது.

நிச்சயம் அரசுக்கு எதிராகத்தான் கேம்கா அறிக்கை தாக்கல் செய்வார் என்று எண்ணியதால் அவரைத் திடீரென தொல்லியல் துறைக்கு கேம்கா பணியிட மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். அவரது 20 வருட அரசுப் பணிகாலத்தில் இது 44 ஆவது பணியிட மாற்றம் என தெரிவிக்கப்படுகிறது.

# மாணவிமீது வல்லுறவு கையை உடைத்த கைதிகள்



டில்லியில் ஓடும் பேருந்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுள் ஒருவரின் வலது கையை, சக கைதிகள் அடித்து உடைத்தனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் டில்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவ மாணவி ஒருவர் 6 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார். சிகிச்சை பலனின்றி அவர் சிங்கப்பூர் மருத்துவ மனையில் உயிரிழந்தார்.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 6 பேரில் ஒருவர் 17 வயதுக்கு உட்பட்டவர். முக்கிய குற்றவாளியாக கருதப்பட்ட ராம் சிங் கடந்த மாதம் திகார் சிறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இந்நிலையில், மீதமிருக்கும் நால்வரில் ஒருவரான வினய் ஷர்மாவின் வலது கையை சக கைதிகள் அடித்து உடைத்துள்ளனர். இதுகுறித்து கூறிய அவரது வக்கீல் ஏ.பி.சிங், வினய் ஷர்மாவின் வலது கையை பிற கைதிகள் அடித்து உடைத்திருக்கினறனர். இதுகுறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார்.

தற்போது தாக்கபட்டுள்ள கற்பழிப்பு குற்றவாளி வினய் ஷர்மா IAF தேர்வுக்கு படிக்க தனக்கு ஆசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும், சிறையில் கொடுக்கப்படும் உணவில் பால் மற்றும் பழங்கள் சேர்க்கப்பட வேண்டும் எனவும் விரைவு நீதிமன்றத்தில் மனு அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரசியல்வாதிகளின் கறுப்புப் பணம் தோண்டி எடுத்துள்ளது குளோபல் மீடியா

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் இந்தியர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணம் குறித்த விபரத்தைத் தோண்டி எடுத்துள்ளது குளோபல் மீடியா சர்வதேச பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பு.

சர்வதேச அளவில் இவர்கள் இணைந்து சுமார் 25 இலட்சம் இரகசிய கோப்புகளை ஆய்வு செய்து, பல நாடுகளின் முன்னணி வரி ஏய்ப்பு, கறுப்புப் பணக் கும்பலை அம்பலப்படுத்தியுள்ளனர். உலக அளவில் நிருபர்கள் இணைந்து நடத்திய முதல் மாபெரும் விசாரணையாக இது கருதப்படுகிறது.

இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபரும், மாநிலங்களவை எம்.பி.யுமான விஜய் மல்லையா, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மக்களவை எம்.பி. விவேகானந்த் காதம் வினோத் ஜோஷி உள்ளிட்ட 612 வரி ஏய்ப்பு செய்துள்ளனர் என்று குளோபல் மீடியா கண்டறிந்துள்ளது. இது தவிர உலகம் முழுவதும் 170 நாடுகளில் உள்ள தொழிலதிபர்கள், தீவிரவாத அமைப்புகள் செய்த ஏமாற்று வேலைகளை அம்பலப்படுத்தியுள்ளது.

# நரேந்திரமோடி பயணம் செய்வது எருமையா? வெள்ளைக் குதிரையா?

(புதுடில்லி)

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி சமீபத்தில் டில்லியில் நடந்த தொழிற் கூட்டமைப்பு மாநாட்டில் பேசுகையில் நாட்டின் வளர்ச்சிக்கு சிலர் தடையாக இருப்பதாக நரேந்திர மோடியை மறைமுகமாகத் தாக்கிப் பேசினார்.



இதற்கு பாரதீய ஜனதா பதில் அளித்து கூறும் போது ராகுல்காந்தியை விமர்சனம் செய்தது. இதையடுத்து காங்கிரஸ் நரேந்திர மோடியை கடுமையாக விமர்சனம் செய்துள்ளது.

காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரஷித் ஆல்லி கூறுகையில் நரேந்திரமோடியை ராகுல் காந்தியுடன் ஒப்பிட முடியாது. நரேந்திர மோடி வெள்ளைக் குதிரையில் பவனி வருபவர் அல்ல, அவர் எருமை மீது சவாரி செய்யும் எமன் என்று கூறினார்.

மத்திய தகவல் தொடர்பு மந்திரி மணீஷ் திவாரி கூறும் போது, "குஜராத்தில் 2002 ஆம் ஆண்டு நடந்த படுகொலைகள் போல் நாடு முழுவதும் நடக்க வேண்டும் என்று நினைக்க மாட்டார் என்று கருதுவதாக கூறினார்.

காங்கிரசின் இந்த விமர்சனத்துக்கு பாரதீய ஜனதாவும் பதிலடி கொடுத்துள்ளது. பாரதீய ஜனதாவின் செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது,

காங்கிரசுக்கு தோல்விப் பயம் வந்து விட்டது. இதனால் தரம் தாழ்ந்த வார்த்தைகளை பயன்படுத்தி விமர்சனம் செய்கிறது. மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி நிலையற்ற தன்மையில் இருக்கிறது.

இதில் இருந்து மற்றவர்கள் கவனத்தை திசை திருப்பவே இது போன்ற தரம்தாழ்ந்த விமர்சனங்களில் ஈடுபடுகிறது. என்று அவர் கூறினார்.

# ஆர்ஜென்ரீனாவில் வெள்ளம்
# 56பேர் நீரில் மூழ்கி மரணம்



ஆர்ஜென்ரீனாவில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் 56 பேர் பலியாகியுள்ளனர் தென்அமெரிக்க நாடான ஆர்ஜென்ரீனாவின் பியுனெசரஸ் மாகாணத்தில் சிலநாட்களாக பலத்த காற்றுடன் பேய்மழை கொட்டியது.

இதனால் ஆற்றில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு லாப்ளாட்டா மற்றும் தலைநகர் பியு னெசரஸ் நகரங்கள் மூழ்கின.

இதிலிருந்து மக்கள் தங்களைக்காத்துக்கொள்ள வீட்டின் கூரைகள், மற்றும் மரங்களின் மீதும் ஏறிக்கொண்டனர். இருந்தும்56 பேர் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு இறந்து போயினர். இதில் சிலர் மின்சாரம் தாக்கியும் இறந்தனர்.

ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். மீட்புக்குழுவினர் மக்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றனர்.

## நைஜீரியாவில் வாகன விபத்து 36பேர் உயிரிழப்பு



நைஜீரியாவில் 'பஸ்,லொறி மற்றும் 'பெற்றோல் டாங்கர்' மோதிக் கொண்ட விபத்தில் 36 பேர் பலியாகியுள்ளனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் ஈடோ மாநில பெனின் - ஓர் நெடுஞ்சாலை உக்போகுயி என்னுமிடத்தில் சென்ற பஸ், லொறி, பெட்ரோல் டாங்கர் என மூன்று வாகனங்கள் மோதிக் கொண்டன.

அப்போது டாங்கர், லொறி வெடித்து சிதறியது. இதில் பஸ்சில் இருந்த பயணிகள் உட்பட குறைந்தது 36 பேர் உடல்கருகி மாண்டனர். 100இற்கும் மேற்பட்டோர் இதில் சிக்கியுள்ளனர்.

ஆபிரிக்காவிலேயே அதிக அளவில் விபத்துகள் நைஜீரியாவில் நடக்கிறது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

கடந்த ஜூலை மாதம் பெட்ரோல் டாங்கர் விபத்துக்குள்ளானதில் 100இற்கும் மேற்பட்டோர் இறந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த விபத்திற்கான காரணம் என்னவென்று விசாரணைகள் நடக்கின்றன.

உலகச் செய்திகள்

## துணைவருடன் திருமணத்திற்கு முன்னரே சேர்ந்து வாழும் அமெரிக்கப் பெண்கள்



அமெரிக்காவில் 50 சதவீத இளம்பெண்கள் திருமணத்திற்கு முன் தங்களது வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்து வாழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் இளம் பெண்களிடம் வாழும் முறையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சில ஆண்டுகள் முன்பு வரை திருமணத்திற்கு முன் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்து வாழும் பெண்கள் மிகவும் குறைவாக இருந்தனர்.

ஆனால், 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை எடுக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், 50 சதவீத இளம்பெண்கள் திருமணத்திற்கு முன் தங்களது துணைவருடன் சேர்ந்து வாழ்வது தெரிந்தது.

இதுவே 2002ஆம் ஆண்டு 45 சதவீதமாகவும், அதற்கு முன் 1995ஆம் ஆண்டு 34 சதவீதமாகவும் இருந்தது. இவ்வாறு அதிகரித்து வரும் இளம்பெண்களின் எண்ணிக்கையில் 40 சதவீத பேர் மூன்றாண்டுகளில் தங்களது திருமண வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றனர். மேலும் ஐந்தில் ஒரு பெண், கர்ப்பிணியாகி விடுகிறார். ஆனால் இந்த ஆய்வில் ஆசியப் பெண்கள் உட்படுத்தப்படவில்லை.

## சிரிய இராணுவ எல்லைமுகாமை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்



சிரியாவில் ஆட்சி மாற்றம் வேண்டி அதிபர் ஆசாத் ஆட்சிக்கு எதிராக போராளிகள் கடந்த 2 வருடங்களாக சண்டையிட்டு வருகின்றனர்.இந்தச் சண்டையில் இதுவரை 75000 இற்கு மேற்பட்டோர் அங்குகொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஜோர்தான் எல்லைப்பகுதியில் உம் அல் மயாதென் இராணுவ முகாமில் இருந்த அதிபர் ஆசாத்தின் படையினருடன் தீவிரவாதிகள் கடந்த ஒரு வாரகாலமாக தீவிர சண்டையிட்டனர். அதன் பிறகு அவர்களை விரட்டியடித்து, அப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். இந்தச் சண்டையில் 40இற்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டதாக கூறப்படுகிறது. இது பற்றிய முழுவிபரங்கள் கிடைக்கவில்லை என்று மனித உரிமை அமைப்புகள் கூறியுள்ளன.

## மலாலா நிதிக்கு 2 இலட்சம் டொலர்கள் ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா அன்பளிப்பு



பாகிஸ்தானில் பெண்கல்விக்குக் குரல் கொடுத்ததற்காக மலாலா என்ற சிறுமியை தலிபான்கள் சுட்டதினால் படுகாயமுற்ற அவர் மேற்சிகிச்சை பெறுவதற்காக பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டார்.அவர் தற்பொழுது பிரிட்டனிலுள்ள பாடசாலை ஒன்றில் படித்து வருகின்ற நிலையில் 'மலாலா நிதி' என்ற அறக்கட்டளை ஒன்றை தொடங்கி உள்ளார்.

இதில், ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலியுடன் இணைந்து பாகிஸ்தானின் சுவாட் பள்ளத்தாக்குப் பகுதியில் பெண்கள் பாடசாலை ஒன்றை தொடங்கப் போவதாக மலாலா கூறியுள்ளார். நேற்று அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த "உலகத்தில் பெண்கள்'' என்ற மாநாட்டிற்கு காணொலி செய்தி ஒன்றை மலாலா அனுப்பியிருந்தார். நியூயோர்க் நகரில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜோலி இந்தக் காணொலியை வெளியிட்டார். இந்தக் காணொலியில் மலாலா தனது முதல் திட்டத்தை அறிவித்தார்.

இத்திட்டத்தில் டுவுமன் சாரிட்டி மற்றும் ஜோலியின் உதவியுடன் திரட்டப்பட்ட 45 ஆயிரம் டொலர்கள் (ரூ.25 இலட்சம்) நிதி, பெண் குழந்தைகளின் கல்விக்காக செலவிடப்படும் என்று கூறினார். மேலும் இந்த நிதியைக் கொண்டு கட்டப்படும் பள்ளியில் 5 வயதிலிருந்து 12 வயது வரை உள்ள 40 சிறுமிகளுக்கு கல்வி வழங்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.


நிகழ்ச்சியில் ஜோலி, மலாலா நிதிக்கு 2 இலட்சம் டொலர்களை வழங்க உள்ளதாக அறிவித்தார். ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி(வயது 37), "பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான கல்வி 'அறக்கட்டளை'என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்.

இந்த அறக்கட்டளையின் மூலம் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூரில் 300 குழந்தைகள் படிக்கக்கூடிய பள்ளியைத்தொடங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் பறவைக் காய்ச்சல் கோழிச் சந்தைகள் மூடல்

சீனாவில் பறவைக் காய்ச்சல் தாக்கி, 16 பேர் பலியாயினர். இதனால், ஹாங்காய் நகரில் கோழிச் சந்தைகள் மூடப்பட்டன. சீனா வின், கிழக்கு மாகாணங்களில், சமீப காலமாக பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது. இதுவரை, 16 பேர் பலியாகியுள்ளனர். நோய் பாதித்த, 20 ஆயிரத்துக்கும் அதிகமான கோழிகள் கொல்லப்பட்டு விட்டன. பறவைக் காய்ச்சலை உண்டாக்கும் வைரஸ்களை, கண்டறியும் சாதனங்களை, சுகாதாரத்துறை, கோழி பண்ணைகளுக்கு வழங்கி வருகிறது. கோழிகளுக்கு தடுப்பூசி போடும் நடவடிக் கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. சீனாவின் வர்த்தக நகரமான, ஹாங்காயில், 2.3 கோடி மக்கள் வசிக்கின்றனர். பறவைக் காய்ச்சல் பீதி காரணமாக, இங்குள்ள கோழிச் சந்தைகள் மூடப்பட்டு விட்டன.

## தூதரக அதிகாரிகளை வெளியேற்றுங்கள் வடகொரியாவிற்கு பிரிட்டன், ரஷ்யா வேண்டுகோள்



வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே நிலவும் அணு ஆயுத சர்ச்சையைத் தொடர்ந்து போர் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. தென் கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்காப் படைகள் குவிக்கப்பட்டுள்ளதுடன்; போர்க்கப்பலையும் நிறுத்தி வடகொரியாவை கண்காணிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த வடகொரியா, அமெரிக்க நிலைகளை நோக்கி தனது ஏவுகணைகளைத் தயார் நிலையில் வைத்துள்ளது. மூடப்பட்டிருந்த அணு உலைகளையும் திறந்து எதிர்சவால் விட்டுள்ளது.

இந்நிலையில், வெளிநாட்டு தூதர்களை வெளியேற்றத் திட்டமிட்டுள்ள வடகொரிய அரசு, ஏப்ரல் 10ஆம் திகதிக்குப் பிறகு போங்யாங்கில் உள்ள தூதரகங்களுக்கோ, தூதரக அதிகாரிகளுக்கோ பாதுகாப்புக்கு உத்தரவாதம் தர முடியாது என்று கூறியுள்ளது. மேலும் பிரிட்டன், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தங்கள் தூதரக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை வெளியேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

# "கித்துளக வருண 2013" இரண்டாம் நாளில் அமைச்சர்கள் பௌசி, சம்பிக்க பங்கேற்பு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் "கித்துளக வருண 2013" தேசிய கண்காட்சியும், விற்பனைச் சந்தையும் இரண்டாம் நாள் நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி கலந்து சிறப்பித்தார்.

கொழும்பு - 07 பௌத்தலோக மாவத்தையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்திற்கு முன்பாக அமைந்துள்ள சிங்கள கலாசார சுதர்ஷி கட்டடத் தொகுதியில் மேற்படி கண்காட்சியும், விற்பனை சந்தையும் நடைபெற்று வரும் நிலையில் அதன் இரண்டாம் நாள் நேற்றாகும்

சித்திரைப் புத்தாண்டு பருவ காலப் பகுதியில் கித்துள்சார்ந்த உணவு மற்றும் உயர்தரத்திலான ஏனைய உற்பத்திகளை கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை ஊடாக அறிமுகப்படுத்தி விற்பனை செய்வதன் ஊடாக உற்பத்தியாளர்களது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

முன்பதாக நேற்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நகர அபிவிருத்தி அமைச்சர் ஏ.எச்.எம் பௌசியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றதைத் தொடர்ந்து கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வரவேற்கப்பட்டார்.

தொடர்ந்து காட்சிக்கூடங்களை அமைச்சர்கள் பார்வையிட்டதுடன், துறைசார்ந்தோருடனும் கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான மேற்படி கண்காட்சியும், விற்பனைச்சந்தையும் இன்றைய தினம் இறுதிநாளாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் சுசந்த டி சில்வா, உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# மன்னார் தாழ்வுபாடு வீதியில் தீப்பிடித்தது பாரவூர்தி

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் இடம்பெற்ற தீ விபத்தில் பார ஊர்தி யொன்று தீப்பற்றி எரிந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இலங்கை அரச போக்குவரத்துச் சேவை டிப்போவிற்கு அருகாமையில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் இடம் பெற்றது.

தீ விபத்தில் காயமடைந்தவர் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள இலங்கை அரச போக்குவரத்துச் சேவை டிப்போவிற்கு அருகாமையில் குவித்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மின் கம்பங்களை வாகனம் ஒன்றில் ஏற்றும் பணியில் வவுனியா மின்சார சபையைச் சேர்ந்த இருவர் ஈடுபட்டு வந்தனர்.

பாரஊர்தியுடன் பெக்கோவின் இணைப்புக்கூள் பொருத்தப்பட்ட நிலையில் குறித்த மின் கம்பங்கள் பாரஊர்தியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த சமயம் பெக்கோவின் மேற்பகுதி மேலே காணப்பட்ட அதியுயர் மின் கம்பிகளுடன் முட்டியுள்ளது.

இதன் போது குறித்த பார ஊர்தியில் மின்சாரம் பாய்ந்து உடனே பாரஊர்தி எரிய ஆரம்பித்தது. இதன் போது சாரதியாக செயற்பட்டவர் மின்சார தாக்குதலுக்கு இலக்கானார்.

இந்நிலையில் நீண்ட போராட்டத்தின் மத்தியில் அவர் காப்பாற்றப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், பார ஊர்தியின் முக்கிய பாகங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

## 64 வீதமானோர்,...

குமார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பரீட்சைக்கு தோற்றியோரில் 73:2 வீதமானோரும், குருணாகல் மற்றும் காலியில் முறையே 68.3 மற்றும் 68.19 வீதமானோரும் உயர் தரத்திற்கு தகுதி பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இம்முறை 4 ஆயிரத்து 500 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். கடந்த வருடத்தில் 3 ஆயிரத்து 900 பேர் மட்டுமே 9 ஏ சித்திகளைப் பெற்றிருந்தனர்.

இதேபோல் பரீட்சையில் தோல்வியடைந்தோரின் வீதமும் 2011 ஆம் ஆண்டில் 4.7 இலிருந்து 4.1 ஆகக்குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியப்...

1980 களின் இறுதியில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது பாதிக்கப்பட்ட பொலனறுவ மாவட்டத்தின் பகுதிகள், வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களில், ஏற்கனவே இது தொடர்பான களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதையடுத்து, 1987 ஒக்ரோபருக்கும் 1990 மார்ச் மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது, கொல்லப்பட்டவர்கள் குறித்த சிறப்பு கணக்கெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் காலகட்டத்தில் இந்திய இராணுவத்தினருடனான மோதல்களில் நூற்றுகணக்கான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதுடன், இந்திய இராணுவ நடவடிக்கையின் போது, பலநூறு பொது மக்களும் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய பிரிவினைவாதக் குழுக்களால் கொல்லப்பட்ட தமிழ்மக்கள், உட்கட்சி மற்றும் குழுக்களுக்கு இடையிலான மோதல்களில் கொல்லப்பட்டவர்கள் போன்ற விபரங்களையும் இந்த விரிவான கணக்கெடுப்பு வெளிப்படுத்தும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

## தமிழ்நாடு...

இலங்கைக்கு மட்டுமல்லாது மத்தியிலுள்ள இந்திய அரசிற்கும் முக்கியமான தொன்றாகும். இலங்கை தொடர்பாக தவறான தகவல்கள் தமிழக மக்களுக்கு வழங்கப்படுகிறது. இதனாலேயே அவர்கள் எப்பொழுதும் இலங்கையை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் இலங்கைக்கு வருகை தந்து தற்போதைய நிலைமைகள் தொடர்பில் நேரடியாக பார்க்காததன் விளைவே அவர் இலங்கை தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு பிரதான காரணமாகும். எனவே வெளிவிவகார அமைச்சு எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமலிருக்க மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடையும் வரையும் தமிழ்நாட்டிலிருந்து எவ்வித அழுத்தங்களும் இலங்கைக்கு வரவில்லை. ஆனால் தற்போது தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இவர்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு அழுத்தங்களைப் பிரயோகின்றனர். இவ்வாறு இவர்கள் அழுத்தங்களைப் பிரயோகிப்பது எதிர்வரும் இந்தியத் தேர்தலை இலக்கு வைத்துத்தான். தேர்தல் முடிந்தவுடன் இவர்களின் அழுத்தங்களும் இல்லாமற் போய்விடும்.

இதேவேளை, தமிழ்நாட்டிலுள்ள சிலர் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் திட்டமிட்டு கைது செய்துவருவதாகத் தவறான தகவல்களை பரப்பி வருகின்றனர். இது பிழையானது இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களையே இலங்கை கடற்படையினர் கைது செய்கின்றனர். இவ்வாறு தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைவது சர்வதேச கடல் எல்லை சட்டத்துக்கு முரணானது. இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்களும் இந்தியத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியை அடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கும் வகையில் கடற்றொழில் அமைச்சு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

எது எப்படி இருந்தபோதிலும், இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைத்...

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழக மக்களின் உணர்வுகளை காங்கிரஸ் கட்சி முழுமையாக புரிந்து கொண்டிருப்பதாக காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர் விடயம் தொடர்பாக காங்கிரஸ் கட்சிக்கு எதிராகக் கூறப்படும் கருத்துக்கள் தவறானவை. அத்துடன், தமிழக மக்களின் குறிப்பாக இளைஞர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி செயற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்தும், அது தொடர்பாக தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்கள் குறித்தும் வாசனிடம் ராகுல் காந்தி கேட்டறிந்துள்ளார். மேலும், இந்த விவகாரம் குறித்து முழுமையான அறிக்கையை அளிக்குமாறு அவர், வாசனுக்கு உத்தரவிட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இந்திய எம்.பி.க்கள்...

ஆறு பேர் கொண்ட இந்தக் குழுவில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட அங்கம் வகிக்கவில்லை. எனினும் இந்தியத் தொழில் வர்த்தக கூட்டமைப்பு நிர்வாக அதிகாரிகள் இருவர் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் குழுவில் பகுஜன் சமாஜ்,பாஜக, திரிணமுல் காங்கிரஸ் எம்.பிக்கள் மட்டுமே அடங்குகின்றனர். இவர்கள் இலங்கைத் தமிழர்கள் நலவாழ்வுக்கான புனரமைப்புப் பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளனர் என்றும் அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்களின் நலவாழ்வுக்காக இந்தியா பல்வேறு கட்ட உதவிகளைச் செய்து வருகிறது. இந்த உதவிகள் சரியாகப் பயன்ப டுத்தப்படவில்லை என்றும், இன்னமும் தமிழ் மக்களுக்கு புணரமைப்புத் திட்டங்கள் சென்றடையாமல் துயரத்தில்தான் மக்கள் வாழ்கிறார்கள் என்றும் குற்றசாட்டு எழுந்துள்ளது. இந்நிலையிலேயே இந்தக்குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்தக் குழுவினர் தங்களுடைய விஜயத்தின் நிறைவில் ஜனாதிபதி .மகிந்த ராஜபக்ஷ வையும் சந்தித்துப்பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வடக்கு...

சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக அரசாங்கம் உறுதியாக அறிவிக்கும் வகையில் தம்மால் எதனையும் கூறமுடியாதெனவும் தான் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுவதென வெளிவந்த செய்திகளையும் மாவை மறுத்தார்.

ஆனால் இவ்வருடம் நடைபெறும் வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடுவது உறுதி எனவும், எனினும் தேர்தலில் இடம்பெறக்கூடிய வேட்பாளர்கள் தொடர்பில் தீர்மானங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லையென அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸில்....

இவர் இரவு ரயிலில் தனது வீடு நோக்கிச் சென்ற வேளையில் இனந்தெரியாதோரின் கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## மாத்தளை...

ன்றது. இந்நிலையில், இந்தப் படுகொலைகள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்வது குறித்து அரசாங்கம் இது வரை எவ்வித முடிவையும் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா, படைத்துறை அமைச்சரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே இது தொடர்பில் முடிவு எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இப்படுகொலைகள் இடம்பெற்ற காலப்பகுதியில் மாத்தளையில் நிலை கொண்டிருந்த படைத்தரப்பின் கஜபா படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாகவும், மாத்தளை மாவட்ட படைத்தரப்பின் இணைப்பு அதிகாரியாகவும் தற்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவே பணியாற்றியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழக....

நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரி என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

மீனவர்களின் 5 இழுவைப் படகுகளும் கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இச்சம்பவம் குறித்து முன்னர் கிடைத்த செய்தி 06 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. (பா)

# இன, மத உரிமை பாதுகாப்பு; விசேட சட்டமூலம் சமர்ப்பிப்பு

## – அமைச்சர் வாசு தகவல்



இலங்கையின் இனங்கள் மற்றும் மதங்களுக்கு எதிராக செயற்படும் குழுக்களை முழு அளவில் கட்டுப்படுத்துவதற்கான விசேட சட்டக்கோவையினை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்துள் ளார்.

நாட்டில் எந்தவொரு இனத்தையோ, மதத்தையோ குறிவைத்து ஏதேனும் ஒரு குழு செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அது பொதுபலசேனாவாக இருந்தாலும் சரி, இன, மத உரிமைகளை பாதுகாக்க வேண்டியது சட்டத்தின் கடமை எனவே எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில், இனங்கள் மற்றும் மதங்களுக்கு எதிராக செயற்படும குழுக்களை முழு அளவில் கட்டுப்படுத்துவதற்கான விசேட சட்டக் கோவை ஒன்றினை சமர்பிக்க திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாசுவின் சட்டமூலத்தை நிராகரித்தார் சம்பிக்க




மத உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அமைச்சர் வாசு தேவ நாணயக்காரவினால் கொண்டுவரப்படும் சட்ட மூலத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அடிப்படைவாத மத அமைப்புகள் மூலம் மதங்கஷ் மற்றும் நபர்களுக்கு எதிராக அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல் ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கில் வாசுதேவ நாணயக்கார, எதிர்வரும் வியாழக்கிழமை அமைச்சரவையில் தாக்கல் செய்ய உள்ள அமைச்சரவை யோசனைக்கு, எதிர்ப்புத் தெரிவிக்கப்படும், கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த யோசனை தாக்கல் செய்யப்படவிருந்த போதிலும் அது ஒரு வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ள அவர் இந்த யோசனையை நிறைவேற்ற ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை, எமது எதிர்ப்பையும் மீறி அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தால் கடுமையான தீர்மானத்தை எடுக்க போவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இறுதிவரை போட்டியில் பரபரப்பு சென்னையை வீழ்த்தியது மும்பை

(சென்னை)

மும்பை இன்டியன்ஸ் - சென்னை சுப்பர்கிங்ஸ் மோதிய பரபரப்பான போட்டியில் மும்பை இன்டியன் அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.



சென்னை சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது மும்பை இன்டியன்ஸ். ஆரம்ப வீரர்களாக பொண்டிங், சச்சின் களமிறங்கினர். ஆனாலும் சச்சின் 0, பொண்டிங் 06 ஓட்டங்களுடன் விரைவில் வெளியேற கார்த்திக் ஓரளவு நம்பிக்கை தந்தபோதிலும் அவருடன் இணைந்த சர்மா 8 ஓட்டங்களுடன், வெளியேற ராயுடு வந்தார். ஆனால் சிறப்பாக ஆடிய கார்த்திக் 37 ஓட்டங்களுடன் வெளியேற, போலார்ட் வந்து வானவேடிக்கை காட்டினார்.

எனினும் மறுமுனையில் நின்ற ராயுடு 07 ஓட்டங்களுடன் வெளியேற, பின்வந்த ஸ்மித்தும் 03 ஓட்டங்களுடன் வெளியேறினார். எனினும் போலார்ட்டுடன் ஹர்பஜன் இணைந்து சிறப்பாக விளையாட மும்பை இந்தியன் அணி 20 ஓட்டங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. இதில் போலாலர்ட் 57 ஓட்டங்களையும், ஹர்பஜன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ~பிரசுவோ 2, நனிஸ், ராஜ்பூட், லாப்லின், அஷ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 149 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக்களமிறங்கிய சென்னைக்கு முன்வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடாத நிலையிலும், டோனி தனித்துநின்று அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றபோதிலும் முக்கிய தருணத்தில் அவரின் விக்கெட் வீழ்த்தப்பட சென்னை அணியின் வெற்றி தகர்ந்தது. இறுதியில் சென்னை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை மட்டும் எடுத்தது.

அவ்வணி சார்பாக ஹகி 20, டோனி 51, ஜடேஜா 16 ஓட்டங்களைப் பெற்றனர். ஹர்பஜன் 2, ஓஜா 2, ஜோனசன், போலார்ட் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக போலார்ட் தெரிவானார்.

# தொடரும் எதிர்ப்புப் போராட்டம்

தனது போதனா வைத்தியசாலையின் முதல் கட்டத்தை திறந்துள்ள மாலபே தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிரான எதிர்ப்பு இயக்கத்தை தொடங்கவுள்ளதாக இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களின் மருத்துவ பீட மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்த வைத்தியசாலை வெறும் கட்டடம் மட்டுமே இங்கு மருத்துவம் கற்பிப்பதற்கான எந்த வசதியும் கிடையாது என மருத்துவ பீட மாணவர் நடவடிக்கைகள் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கையிலுள்ள பல பல்கலைகழகங்களில் மருத்துவ பீடங்கள் இல்லை இதைக் கவனிக்காமல் சட்டவிரோத் நிறுவனம் ஒன்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது என சங்கத்தின் தலைவர் நஜித் இந்திக்க தெரிவித்தார். ஒழுங்கு விதிகளுக்கு அமையாக ஒரு தனியார் மருத்துவ கல்லூரி மீது அரசாங்கத்திற்கு ஏன்? இவ்வாறு அக்கறையுள்ளது எனவும் அவர் கேட்டார்.

போதனா வைத்தியசாலையின் ஒரு பகுதியை திறப்பது சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையை திறப்பதற்கு சமனாகாது. இந்த நிறுவனம் பூரணமான பாடத்திட்டத்தை கொண்டிருக்கவில்லையென நாம் முன்னர் நிரூபித்திருந்தோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலியா செல்ல முயன்ற 120 இலங்கை அகதிகள் கைது

நாகை மாவட்டம் வேளாங்கன்னியில் இருந்து அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முயன்ற போது நடுக்கடலில் படகு பழுதானதால் மாட்டிக் கொண்டு தவித்த இலங்கை அகதிகளை இந்தியக் கடலோரக் காவல்படையினர் பத்திரமாக மீட்டனர்.

நெல்லை, திருச்சி மாவட்ட அகதிகள் முகாம்களில் இருந்த 120 இலங்கை அகதிகள் நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் வேளாங்கன்னியில் இருந்து சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்குப் புறப்பட்டனர். நேற்றுக் காலை 10 மணியளவில் நாகையில் இருந்து 9 கடல் மைல் தொலைவில் சென்ற போது படகு இயந்திரம் பழுதடைந்தது.

நீண்ட நேரம் போராடியும் இயந்திரத்தை சீர்செய்ய முடியவில்லை. பின்னர் இந்தியக் கடலோர காவற்படையினருக்கு படகில் இருந்த அகதிகள், தெரிவித்துள்ளனர். தகவலறிந்து தேடுதல் பணியை தொடங்கிய இந்தியக் கடலோரக் காவற் படையினர் நடுக்கடலில் தத்தளித்த அகதிகளை மீட்டனர்

இம்முறை புத்தாண்டுப் பண்டிகையை DHL துணையுடன் குதூகலத்துடன் கொண்டாடுவோம்

DHL வழங்கும் புத்தாண்டுச் சலுகை

3Kg வரையான பொதிகள் அனைத்தும் ஒரே கட்டணமாக ரூபா 3,990/=

இம்முறை புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் வெளிநாடுகளிலுள்ள உங்களது அன்பிற்குரியவர்களுக்கு பரிசுகளை அனுப்பிவைப்பதற்கு DHL வழங்கும் சலுகையை தவறவிடாதீர்கள். அது மட்டுமல்ல நீங்கள் அனுப்பிவைக்கும் ஒவ்வொரு பொதிக்கும் இலவச அன்பளிப்பொன்றும் உங்களுக்காகக் காத்திருக்கின்றது.

ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் மே மாதம் 15 ஆம் திகதி வரை கிடைக்கின்ற இந்த புத்தாண்டுச் சலுகையை தவறவிடாமல் உபயோகித்து பயனடையுங்கள் விரையுங்கள்!

இம்முறை புத்தாண்டை எம்முடன் இணைந்து இன்னும் சிறப்பாகக் கொண்டாடுவோம்



DHL Courier
Jaffna Branch
T.P. 0772211356

and

Jaffna Branch
T.P. 0214923528

இல. 94, கே.கே.எஸ். வீதி
பிரதான தபால் நிலையம் அருகாமை.
வாடிக்கையாளர் தொடர்பு இலக்கம்
T.P. 0112304304

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.